உ

குருவே துணை.

சதுர்வேதசித்தாந்தத்துள்ள

சட்சமயங்கட்குஞ் சமயாதீதத்திற்கும்

பொதுவாகிய

முதலொலியலந்தாதி.

முருகதாசசுவாமிகளென்றுந்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

MAHAMAHOPADHY
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR MADRAS

பல வண்ணப்பாவலர் விருப்பத்தின்படி,

சென்னை:

பால்குரிகி - சிவலிங்கையரவர்களால்

தமது

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சருவதாரிஞு பங்குனிமீ

ரிஜிஸ்தர் செய்திருக்கிறது.

மருமலிவுறுமபானல்வனைதருமாலிகையான்
மலயமலையின்சாரன்மருவுநெல்வேலியுளான்
முருகனுதவும்பாலனெனநிகழ்மேன்மையினான்
முதலொலியலந்தாதிநயமுணர்வார்சிலரோ.

கட்டளைக்கலித்துறை.

வலிநலிந்தியார்க்கும்வகுக்கரிதாயவகையினைக்கண்
டலிமுதன்மூன்றற்குமப்பாலுறுமொன்றருள்சுரந்து
மலிவுறுவார்*தண்டபாணிவரைந்துவழங்கியபின்
னொலியலந்தாதியென்றோர்பிரபந்தமிங்கோங்கியதே.

சிவமயம்.

இந்நூலாசிரியர் மாணாக்கர்களிலொருவராகிய

திருநெல்வேலி

தி. செ. சித்திரபுத்திரபிள்ளையவர்களியற்றியன.

தனனதனதானதன தனனதனதானதன தனனதனதானதனா.

உலகமுதலாமளவில்பொருளுதவுநான்முகவ
னுரிமைமகவாகிவருவோ
னுமையவளையீசர்புரிமணமுடியுமாறுதிக
ழுயர்பொதியைமேவிவளர்வோன்
பலகலையினாடினியதமிழருமையாகுமெனல்
படியினருநாடியுயவே
பயில்விதியினாலுதவிர்சதமெனவலோர்களுணர்
பனுவல்கள்கிரீடமிதுவே
கலகமிடுநாவலவர்மனமிகவுநாணியொரு
கனவிலுமெணாதவலிதோய்
கவியினதுசீர்மருவுமொலியன்முடிவாதியெனோர்
கடலினையிநாளுரைசெய்தான்
றிலகமெனமாதவருமுயிர்வதைசெயாதவிர
தியர்களுமெநாளுநுவல்வோன்
சிவனரிகணேசனுமைபரிதிகுகனானவகை
தெளிமுருகதாசமுனியே.

* தண்டபாணிவரைந்தென்றதற்குத் தண்டந்தரித்தகை யெழுதி யென்றுங் கொள்ளற்பாலது.

தந்ததனதானதன தந்ததனதானதன தந்ததனதானதனனு.

சந்தவரைமேவியுயர்செம்புநதியோடிணைபி
றண்டமிழுமீனியருள்வோன்
சம்புநிகரானமுனிவன்புகலுநூலினிடை
தங்கொலியலானதிணையே
திந்தவெனவாடுமரனந்துடையமால்பெரிய
சிங்கமிசையேறிவருவாள்
செங்கதிர்கணேசன்முருகன்குருவுமானவொரு
செமபொருளின்மீதுரைசெய்தான்
வந்தபடிபேசுமடமிஞ்சுமடியேனுமுய
வண்கமலபாதமணிவோன்
வண்டர்குடிகேடுபுரிதண்டமுடன்வேல்கொளொரு
வன்கருணையேவடிவினு
னிந்தவுலகூடுவளர்கின்றவர்களியாவருந
லின்பமுறுமாறுமுயல்வோ
னெங்குநிறைவானபரனங்குகனெனுமொழியு
மெங்கள்குருநாதமுனியே.

தன்னதந்தனனதன தன்னதந்தனனதன தன்னதந்தனனதனனு.

பொன்னிசெந்தமிழ்பொருணைநண்ணியன்றுநவியுயர்
பொன்விலன்றணைநிகருமோர்
புண்ணியன்பொதியைவளரண்ணறந்திடும்விதிகள்
புன்மையன்றெனநுவல்வலோர்
சென்னிதுன்றிடுபனுவல்வெம்மைநெஞ்சுறுகவிஞர்
சென்மமென்றியசனியிதே
சின்னதன்றெனமலைவொடெண்ணிநொந்தயரவளர்
திண்ணமிஞ்சொலியலிணையே
யன்னியம்படுசமயமொன்னினுங்கொலைகொடிய
தம்மவென்பவரையகலா
தங்கணந்திகழுமொருசின்மயன்கழலின்மிசை
யண்மைகொண்டினிதுரைசெய்தா
னுன்னிடும்படியுலகர்நன்மையின்றியவுணவு
முண்ணல்கண்டுளமறுகுவோ
னுண்மைதந்திடுமிணையில்வண்ணவண்டமிழ்விதிசொ
லொண்மைதங்கியமுனிவனே.

சிவமயம்.

வளவனூர்க்குமாரபுரிவாசம் பொய்கைப்பாக்கம்

அப்பாசாமியுபாத்தியாயரவர்கள்

இயற்றியன.

தந்ததானதன தந்தனதனனா.

இந்தநாள்வரையி லெங்[illegible]லதா
யின்பநீடுறமெ ணெண்கலையுளதா
யந்தமாதிபுணர் வண்பெறுகவியா
றைநததாயொலியல் விண்டனனுலகூ
டெந்தநாவலர்க ளும்புகழ்தகையா
னெங்களாறுநெறி யுங்கொளுநிலைதோய்
சந்தவாரிதிநெ டுங்கழைவனம்வாழ்
தண்டபாணிய னனுஞசரபமதே.

அறுசீர்விருத்தம்.

சீரினுயர்பிரபந்தங்களுக்கெல்லாமகுடமெனத்திகழ்ந்தே யோங்கு, நேரினுயரொலியலந்தாதிகளிலெண்ணெண்கலைந்தலைமைநிகழ்த்தினால், வேரினுயர்சந்தவரைக்குறுமுனியேயெனப்புலவர் விளம்பத்தோன்றிப், பாரினுயர்நெல்வேலித் திருப்புகழோனெனப்பெரும்பேர்படைத்துளானே.

சிவமயம்

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களியற்றியன.

பொன்பூத்தபுரிசடையெம்புராணன்வேய்வயிற்றோன்றும்பொருவில்சீர்த்திக், தென்பூத்தநெல்லைவருமெழிற்றண்டபாணியெம்மான்றிறத்தினோர்ந்து, மன்பூத்தவறுசமயப்பிணக்ககலுநெறிமரபின்வயங்காடிக், கொன்பூத்தவேற்கரத்தெங்குகனருளாலொருநூலைக்குயிற்றினால்.

அன்னநூலிதுகாறுமருந்தமிழிற்குரவுபூண்டவரின்மேலோர், பன்னரிதாயொலியலந்தாதியெனநிலாய்மலையப்பறம்பினென்றுந், துன்னியமாமுனிவனிவன்றானேயென்றிடுந்தோற்றந்தோற்றினாளு, மென்னனையார்கற்றிறும்பூதுறச்செய்ந்ததெனினிதன்சீரியம்பற்பாற்றோ.

சிவமயம்.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றியன

கலிநிலைவண்ணத்துறை.

தந்ததானன தந்ததானன—தனதானா.

சந்தநாவலரென்றபேரினை யுடையோரே
 தங்களுளினிலிந்தநூல்விதி யிலையேயோ
விந்தநாளினிலிங்குவாழுறி னைகையேயா
 மென்றுவானிடைசென்றுவாழ்வது மிதமேயாம்
விந்தமால்வரைகுன்றநீடிகை முனிவோன்வாய்
 விண்டநீதியணைந்துளாரிதன் விதமோர்வார்
தந்தமாவடர்சிங்கமேல்வெருள் ககமேநேர்
 தண்டபாணிவிளம்பல்பாவலர் தவமாமே.

வெண்பா.

தண்டபா ணிச்சரபஞ் சாற்றொலிய லந்தாதி
கண்டபின்னர் வாணி களிப்புற்றாள்—வண்டமிழிற்
பாடவலாஞ் சந்தமெனும் பாவலவரி யாவரும்வாய்
மூடியொல்க லுற்றார் முகம்.

சிவமயம்.

அஷ்டாவதானம்

பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கர்

வல்லை-சண்முகசுந்தரமுதலியாரவர்களியற்றியது.

தனனதானன தனந்தானதன தனனதானன தனந்தானதன
தனனதானன தனந்தானதன—தனதானா.

திருமின்வாழ்வுறுமணஞ்சேர்கமல
 மலரும்வாவிகள்வளந்தேவயல்கள்
 செறிவதோடுவிணளந்தேபொழில்கள் கலைபோலே
திகழ்நெல்வேலியில்வருஞ்சாமியொரு
 முருகதாசகுரவன்பாவலவர்
 தினமுமேவழிபடுஞ்சீர்வளமை பெறுவானோர்
பரமனேபலர்சொலும்பான்மையுறல்
 சரதமாமெனவுணர்ந்தார்வமொடு
 பரவுசீலவிரதன்றாரணியி லுயிர்மீதே

பரிவினாலவைசுகந்தோப்தகுதி
கருதியேயுயர்பரந்தாமணிகர்
பகரவேமுயல்பவன்றாய்மைதரு முழுநீறோ
டருள்விலாசமணியின்றாழ்வடமு
மொருகலாடையும்வனைந்தேதிகழு
மணியினாணிசைமிகும்பாமகளி னருளாலே
யருமையாமொலியலந்தாதியினை
நயமெலாமுறநவின்றானுலகி
லதனைநேர்பெறுதலின்றேவிதிசொன் முதுநூறேர்
தெருளினோர்களுமொழிந்தேசரப
மெனநிலாவிலாகஞ்சேர்கவிஞர்
செயவொணாததொடிணைந்தோதிடுவ தெவரேயோ
தெரிகிலேனதனயந்தானரிதி
லரியதாமெனிலெனென்றேதமுறு
சிறியனாடியுளநின்றேமகிமை புகல்வேனே.

சிவமயம்.

அஷ்டாவதானம் - பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கர்

காஞ்சி-நாகலிங்கமுதலியாரவர்களியற்றியன.

தனனதானன தனதனதனன—தனதான.

பொதியைமேவியகுறுமுனியுதவு தமிழாலே
புனிதமார்பலகவிகளுமுலகி லிடுவோனே
பதிதரான்மலிகொலைவினைகளைய முயல்வோனே
பரவுமாதவசித்தியெனநிலவு குரவோனே
தகியிதாமெனவுனதிருகமல பதமீதே
தளிரைநேரிளமொழிகொடுதுதிகள் புரிவேனே
முதிருமாசையெய்தியபடிமகிழ வருள்கூர்வாய்
முருகதாசனெனொருபெயர்மகிமை வலிதாமே.

நேரிசைவெண்பா.

கலியதனைச் சீறுங் கவின்முருக தாச
னொலியலந் தாதியினை யோதில்—வலியுண்டாஞ்
சந்தமெனும் பாவுக்குச் சாருமி லக்கணமாம்
பந்தமெனு நோய்போம் பறந்து.

சிவமயம்.

அரன்வாயல்-அப்புப்பிள்ளையவர்கள்குமாரர்

வேங்கடசுப்புப்பிள்ளையவர்களியற்றியது.

தனனதனதான தனதனந்தான
தனனதனதான தனதனந்தான
தனனதனதான தனதனந்தான—தனதான.

புவிமகளினுடையெனவிளங்கோத
மெறிதிரைகண்மோதுமெயிலின்மஞ்சேறு
புகழ்கொளலைவாயிலமர்குகன்சேய முகமாவாழ்

பொருளின்வகைகாணநறியசெந்தேனு
மமுதுகனிபாகுமிணையிலென்றாசு
புலவர்குழுநாடியநுதினம்பாடி மகிழ்கூர்வா

னுவமையறுவேதநெறிவளர்ந்தேத
மறநெறிகள்பாறவுயிர்கடுன்போட
வுலகிலருளாடல்புரிதிறன்கூடும் விழைவாலே

யுசிதவணிநீடுபலவணஞ்சேர
வறுபதொடுநாலுகலைகளொன்றாகி
யொளிர்கவியையாறினொலியலந்தாதி யெனுமாநூல்

செவியுறுவனுவுமுளமுமின்பார
மயிலிறையுமீடிலரியதென்றேனை
செறியவுமிராறுநெறிகளும்பேணு முகில்போலே

திசைமுழுதுமேவியிசைமலிந்தார
வுதவினைநினைதுபுலமையின்சால்பு
சிறுமதியினேனுமினிதுகொண்டாட லெளிதேயோ

கவிவகைகளுழுமலைவதின்றாக
வருணகிரிநாதனெனவிருந்தீயில்
கவிஞர்குலதீபயெனவருந்தீர வளநீர்தோய்

கவினுறுநெல்வேலிநகரிலன்பாளர்
துதிமுருகதாசவனகநெஞ்சான
தமலமகலாதகருணையெஞ்சாத பெரியோனே.

சிவமயம்.

அரன்வாயல்-அப்புப்பிள்ளையவர்கள்குமாரர்

அ. தங்கவேலுப்பிள்ளையவர்களியற்றியது.

தனதனந்தான தய்யதன தனனதன தானதன—தனதான.

மருவுசந்தாதிமைதவழுமணிகொடியர்வானமிசை
வளர்தருஞ்சீர்மைமல்குதனிமலயமதிலேதமரு
மனதிலன்பாருநல்லதவாபெரிதுபுடைசூழ்தரவி
ரவிபோலே
வந்தனைமைந்தாருமொள்ளியன்மெயருள்கொடுநிலாவுகுறு
முனிவன்முன்போதிவையமதினிறுவவளர்தூயதமிழ்
மணமுணர்ந்தார்களில்லையெனவுளமதனினுடியரு
ளியதாலே
திருவளங்காணுநெல்லைநகரதிலுதயமாகியெழி
லுருவுடன்பேர்கொடெய்தியிவனுவல்பனுவலாகுமிது
திறமறிந்தியாவர்சொல்லவலரில்லையில்லையெனுவறிஞர்
மகிழ்வாலே
தினமுநண்போடுசெவ்வியநினதுமகிமையோதவறு
சமயமுங்கூறுமெல்லவனைமதியணியும்வார்சடைகொள்
சிவனையைங்கரைதவல்லியுறழ்கவுரியினைமாயவனை
மதமாநே
ருருவியன்றோபுமையனைவிணவர்கள்சிறைநீரவென
வருநலஞ்சேருமல்லன்மதகளிறனையசேவகனை
யுவகைகொண்டியாவரொவ்வுருவொடெணினுமதுவாகிநன
விணுநேரோ
யொளிருமொன்றனதெய்வமதையுணருமநுபூதிநிகழ்
சமரசங்கூடுமுள்ளமொடுமெதுரமதுவாழிநிக
ரொலியலந்தாதிவிள்ளுமுதுபுலமையெனுமவீறுபெறு
முனிவோனே
கருவிலொன்றுமலுய்கையருள்பொடியணிகலாடைமணி
வடமுடன்பேசுசைவநிலைவளரு[illegible]டையாளமொடு
கருணைகுன்றுதவள்ளலெனவருமுருகதாசநினை
மறவேனே
கமலமென்பூவில்வைகுதிருமகளருளும்வேதமுத
னவில்பெருஞ்சீர்கொள்வெள்ளைநிறமகளருளுமாசுதவிர்
கதிபெறுஞ்சீலருள்ளுறவுமுறவருள்செய்தாளவினி
திசைவாயே.

சிவமயம்.

விருத்தாசலம்-தியாகராஜக்கவிராயரவர்கள்குமாரர்

கலியாணசுந்தரம்பிள்ளையவர்களியற்றியன.

நேரிசைவெண்பாக்கள்.

சந்தப்பாவர்க்கமெலாஞ்சாரொரலியலந்தாதி
யிந்தப்பார்தன்னிலியம்பினு—னந்திமுக
மைந்துடையார்தஞ்சேயருண்முருகதாசனென்னு
மைந்துடையானன்குமதித்து.

அஞ்சேலுண்கண்ணூரவாவகலுமாக்கமுற்று
மெஞ்சாகுருவருளுமெய்துமே—நெஞ்சே
வெருட்டண்டபாணியஞ்சவேலவனைப்போற்றுந்
தெருட்டண்டபாணிபதஞ்சேர்.

சிவமயம்.

ஆரியர்

கா - ஷடாக்ஷரப்பிள்ளையவர்களியற்றியது.

தனதனதத்தன தானனதனதன.

அருளுறுசட்சமயாதிதமவையது
மறுபதுமுப்பதுமாறிடமிசையது
மடிசதுரத்துநளுலதுபலவிசை
யதுகலைவைப்பதுபால்வணமொளிர்வது

தெருளுறுமுத்திகையீறுமுதலிலது
திருவருளுற்றொளிர்சீர்கிழவரொனுமெய்
செறியவுரைத்திடுநூலொலியலைவழி
தெரிதரவைத்ததுசேர்கரநெலியென

பொருணிறையப்பனொடாயுமிவுலகமுய்
புரியவியற்றியமாதவமெனமிரு
பொழிதருமற்புமெய்மாரியொடறிவரு
புகழ்பெறுசித்திகளாயிரமுடனனி

திருவுருவுற்றொளிர்சீர்நிகழயில்பெறு
சிவகுருபொற்பதமாமலர்முடிபுனை
திகழ்செய்திருப்புகழ்சாமிகளெமதிரு
டிரியவுரைத்தனாசீரடிதுணையதே.

சிவமயம்.

பொய்கைப்பாக்கம் - சின்னையவுபாத்தியாயர் பௌத்திரரும்
வைத்தியநாதமுதலியார் புத்திரருமாகிய

பொ. சுப்பராயமுதலியாரவர்களியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

சீரார்வலம்புரிசெறிபாஞ்சசன்னியங்-கூராராழியாதியகொண்டு, பாரார்கலையிற் பரந்தபரவையி - லேரார்மாசுண மென்னுமணையின், கண்ணினிதமர்ந்துகாவல்செய்கமலக் - கண்ணனுந்திக்கடிமலர்ப்பொகுட்டி, லிருந்தவத்துதித்தவியல்புடைப்பிரமன்-வருந்துதலின்றிவளம்படவமைத்த, வரும்புவியதனிலணிநவகண்டத்துட்-பெரும்பயனல்கும்பெற்றியதாகி, யொப்பறுகுமரிகண்டத்துளதாய்த் - தப்பறுமீனவன்றண்ணியநாட்டின், வரையிடையுதித்துவரையளவற்றுத்-தரைமுழுதேத்துந்தன்மைத்தாகி, மணியுமகிலுமாசறுதேக்கு - மிணையில்பல்பொருளுமேந்திக்கீழ்த்திசை, தாக்கியொளிருந்தாம்பிரவன்னி- தேக்கியொழுகுந்தீம்புனல்வளத்துப், பங்கயமாம்பலும்பன்னிறப்புட்களுந்-தங்கியவளியினந்தங்கும்பூம்பொழில், வெங்கதிர்காலும்வேனிலதனிலு-மெங்கணுமமுதமீயுஞ்சுரபிக, ளரிகரப்பிரமராதியானோர்களுந் - திரிபிலாதீசனைத்தினந்தொழுநெல்லைத், தாயுந்தந்தையுந்தவஞ்செய்பலத்தாற்-றூயசேயாய்த்தோன்றிசுசுகுண, னற்றவமெல்லாநயந்துகலந்தொளிர-பெற்றுப்பொலிந்தபேரருள்வடிவ, னெழுத்துமுதலியவிலக்கணமாய்ந்து - பழுத்தவுள்ளம்பதிதருமுனிவன், றண்டொடுபொலிதருதடக்கைச்சரப-மெண்டிசையெங்குமெறிக்கும்வேலோன், கொல்லாவிரதங்குவலயத்துள்ளா - ரெல்லாங்கொள்ளற்கேமிகமுயல்வோன், றிருப்புகழ்முருகதாசனென்றும் - பொருப்புறழ்நாமம்புனைதருபுனிதன், புலவர்தம்மரபினர்போதப்போற்று-நலனுடைத்தாகிநறுந்தமிழ்பிறந்த, நாண்முதலொருவருநவிலாதாய - மாணுடைப்பெருந்திறம்வாய்ந்துவயங்கு, மொலியலந்தாதியொன்றுரைத்தான் - மலியருட்டிறத்தின்வண்மைதோன்றிடவே.

வேலுமயிலுந்துணை.

உ

குருவே துணை.

ஒலியலந்தாதி.

காப்பு.

தனந்தனந் தானதய்யத்—தனதானா.

விழிகள்கண் டார்வமெய்தெற் கதிரோனே
விடையில்வந் தியாவுநல்கத் தருதேவே
கழிபெறுங் காமர்வல்லிக் கொடிபோல்வாய்
கருணைகுன் றாதசெல்வத் திருமாலே
பொழிமதம் பாயுமல்லற் களிறானாய்
புலவர்கொண் டாடும்வள்ளற் குமரேசா
வொழிவிலொன் றாயதெய்வப பொதுவாழ்வே
யொலியலந் தாதிசொல்லத் தருவீரே.

நூல்.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன—தனதானா.

திருவருள்வலிபெறு சமரசநிலையினர்
செழுமலரடிதரு துகள்போலே
திறமுறுதுணையிறி நிலையெனமுடிமிசை
தினமதையிடுதவ முலையாதே
செறிமயல்களைதரு குருமொழியினையிகழ்
திருகுடையவரொடு பழகாதே
செகமுழுதினும்வெயி லுமிழ்பரிதியினெதிர்
திடமொடுதொழுதெழல் பிழையாதே
சிறுகொதுகதுசிறை முறியினுமயர்வொடு
சிவசிவவெனுமொழி மறவாதே
சிலையினவதிபதி தருமகடிருமக
டெளிவுறுகலைமகள் முதன்மானார்

திரண்முழுமையுமென துருவெனநுவல்பனை
செயலுயர்வெனுமுணர்   வழியாதே
திகிரிவெள்வளைபுனை கரமுரகரிபெறு
செயமிகமொழிதகை   நழுவாதே,(௯)

திநுமலைநனிதரு மவர்பகைகளைதரு
திரிவிழிமதகளி   றதனாலே
திரையறுபாகதி வரைபெறலெளிதென்மெய்
திகழ்தவமுனிவரை   யிகழாதே
சிகிமிசையயில்கொடு பலபலமலைமிசை
திரிதருமுருகனை   மிகநேர்வார்
தெருண்மலிதமிழ்நய மறிதருபுலவர்கள்
சிலர்பெறுபுகழ்விழை   வொழியாதே
திதிதருபுதல்வரை யனையர்சொல்வழிபுகு
திருடரையுறவென   மதியாதே
செழிநிணமொழுகிய பறிதலையமணர்கள்
சினவியகுணமொடு   பகர்நூலே
திரமெனவளவறு மகிழ்வுறுகொடியவர்
சிதைவுறமுனிதலின்   மெலியாதே
சிதறியமலர்பொலி தருநிழல்பெறவுயிர்
செறுதலுமிழிவெனல்   கடவாதே, (௰)

மருமலர்வகைகளி னரசெனுமதன்மிசை
வதிதருவிதிதரு   மறையூடே
வழுவறுநெறிவகை தெரிதருபெரியவர்
மகிழ்வுறுதொழில்களின்   முயலேனோ
முனிதனில்வடிவுள கடவுளெனிசைகொடு
மகிதலமுயும்வகை   புரியேனோ
மலிதருபகைபெறு சமயர்களனைவரும்
வழிபடுபொதுவனின்   மிளிரேனோ
மறிகடனடுவளர் கொடியரையடியொடு
வளிதருமருமணி   லடரேனோ
மலயமதுதவிய தமிழ்கொடுதுதிமிக
வனைதருசதுரரி   லுலவேனோ
மணிவடமொழிவிதி யமைதருசுவடியுண்
மலினமில்குறிகட   மணிசேர்சான்

மதியுறழ்கலைமக ளொடுமுனைமிகலிவெல்
  வலிபெறுத்வசியொ   டிணையேனோ (வரு)
வருளமென்மலர்புனை குழலியொடுறைசெயும்
  வயிணவர்பதின்மரு   ளமையேனோ
வறிதுருடறிபல கனிதரவருள்கிழ
  வனிதைசொல்விதிவழி   நடவேனோ
வளமுறுபொதிகையயி லமர்குறுமுனிசபை
  வயினுறுபெருமையு   மடையேனோ
மனதறியறுபவ நிலமிசையவிர்தலின்
  வசைபகர்பவர்குலம்   வெருளாதோ
மனையயமுயல்பசு வனையநலுயிர்களும்
  வதைபடநிணறுகர்   கொடியோர்தா
மழைமுகில்வெருளுற வருபணியிடைபடும்
  வனசமதெனமுழு   தெரியாரோ
மழவிடைகருடனெண் மயிலனையவைமிசை
  வரவுனதிருவுள   மிசையாதேன்
மடமையிலுயர்வுறு மெனதினமனையமெய்
  வடிவுகொள்குருவென   வருவாயே, (௨)

பருவதமுழுதலை கடன்முழுதவைபுணர்
  படிமுழுதுதவிய   முதியோனே
பலபலவுயிர்களு முணவுணவுதவிசெய்
  பரிசுறுகரமிகை   யுடையோனே
பகர்பொருண்முழுமையு மனைநொடியிடைபொடி
  படவடும்வலியொடு   நிகழ்வோனே
பதுமனையனையவ ருணர்வொளியினுமிருள்
  படர்வுறவொருதினை   யிடுவோனே
பகல்வரின்மடிவுறு புழுவினையிமையவர்
  பதவியிலமையவு   மருள்வோனே
படிறுறுசமயரு முனதெனதெனவிகல்
  பகையுறநடுவினி   லமைவோனே
பலியுணவதுகதி தருமுதலெனவுணர்
  பவரறிவதனிடை   திகழ்வோனே
பனிமலர்முதுநெய் முதலினகொடுவழி
  படுநெறிகளின்மிசை   வெருளானே, (உரு)

பசுநிணமுயர்சுவை யினதெனநுகர்சில
பதிதருமிகழுரு மிறையோனே
பறவையுநிலமிசை நகர்பவுமறவிடை
பழகுவனவுமறி தகையோனே
பவமிலையுடலல துயிரிலையெனநவில்
பரிவினர்சிலர்சொலு மணிவோனே
பழுதொழிரதகச துரகமுமிகைபடு
பதசரர்களுமென நுவல்கூருர்
படையெனும்விரிகட லடர்சதுரதர்நனி
பயமுறுதவவலி தருவோனே
பகரமொடுல்விய மயினிகர்வனிதையர்
பகமயல்களையுமெ யுணர்வாவாய்
பகடதன்மிசையிவர்நமனுடனவன்விடு
படையும்வெலுமவர் துணையாவாய்
பதிலறுமொருகுடை நிழலுடையவரது
பலிசையுமிகழ்சில ருயிரானாய், (௯)

கருணையிலுயர்நல மிலையெனநுவலிய
கவிஞர்தமனமல ரகலானே
கடலிடையமரரு மவுணரும்வலிகொடு
கடையுநலமுதுறழ் சுவையோனே
கலிபுருடனையவ னுறவினருடனடல்
கருதியநிலையினர் தமையோவாய்
கனகமதனிலுயர் பொருளிலையெனமுயல்
கயவர்புன்மனமதின் மருவாதாய்
குறைமலிவிடநிகர் தருவர்கள்விழைதரு
கனவரமுதவவு மெலியானே
கமடமதனைநிகர் பதமுறுசிறுமியர்
களிலொருசிலர்தொழ மகிழ்கூர்வாய்
கதுமைகொள்படைசிலர் பெறவுமுனருளிய
கதைபகர்பவர்பகை களைவோனே
ககபதியினுமிகும் விரைவுறுமனதினர்
கனவினுநனவினு மவிர்வோனே, (௰)

கமலமென்மலர்முழு தலர்தரவிணில்வரு
கதிரவர்பலபல புலரானும்

கசைகொடுமதலைகொண் மனையொடுவிடைமிசை
கவினுறுமரரள விலரானுய்
கயிறொடுமதகயம் வெருளுறுபடைபுனை
கரவனிதையரது குழுவானுய்
ககனமுகிலமுமு னளவியபதமுறு
கருமுகிலுருவுமெ ணிலவானுய்
கரிமுகமுறநல மொடுபிறிதினும்வரு
கணபதிவடிவமு மிகவானுய்
கனிதமிழுரைபகர் கிளியுலவிடமிளிர்
கடகபனிருபுய மொடுவாழ்வார்
கனல்வடிவமுமிக மருவியகுருபர
கதிபெறுமுடிவினில் வெளியாவாய்
கடவுளெனொருபொரு ளிலையிலையெனநகு
கலையினரறிவரு பெருமானே. (க)

—◇◇—

தானன தானன தானன தானன
தானன தானன—தானனதானு.

மானனையார்சுக மேயினிதாமென
வாடியெநேரமு நாடிநைவேனு
மாழையின்மால்கொடு மூடகுலாதிபர்
வாழ்மனை வாயில்க டோறலைவேனு
மாநிலமேபர லோகமுமாமென
வாதிடுவாரொடு கூடிடுவேனு
மாசறுதேவிலை யாமுளமேயெனும்
வாயுடையாரொதிர் நாணுறுவேனு
மாமிசமேயுண வாநுகர்பாதகர்
வார்குடைநீழலி னூடயர்வேனு
மாதவமேதுமி லார்குழுவேசலின்
மூழ்கியகோரவி சாரமுள்வேனு
மானிடர்நாடரி தாமதிமாலுற
வாதனையாயிர கோடிகொள்வேனு
மாணமெளேனுமி லார்சிலர்மேலபி
மானமெய்தீனமு தாலுழல்வேனு,(உ)

வார்புனைபூண்முலை யார்நடுவேவரு
மாரனைநாளும்வி டாதிகழேனோ
மாகர்பிரான்முத லோர்கொளுநாலிரு
மாதிரமூலமு மேகிவெலேனோ
மாயையினூடுபல் கோடிமகாபதம்
வாய்தன்மெயாமென வேதெரியேனோ
மாறிலனுமொரு கோனுளனேனையர்
மாய்குநர்தாமெனு நூல்விதியேனோ
வாரணமேறிவி னுளவெனுவணி
மாநகர்வேள்விய மேதமெனேனோ
வான்வழிபோய்வரு மேலவர்தாமுமென்
மான்மியமோதிடு மாறெளிரோனோ
மாசுணமேனட மாடினனுதியர்
மாணுவல்வார்நனி பேசனுறேனோ
வாகுவனேகமு ளார்பொரநேரினும்
வாகைகொள்வீரர்க டாழநிலேனோ, (வ)

தேனவிழ்பூவகை யால்வழிபாடுசெய்
சீரியர்பாழ்மிடி யானலிவாரோ
சேனுலகாசையு மீனமெனுவுணர்
தீரனைநாயனை யார்நகுவாரோ
தேகமதேயுயி ராமெனுநூலுணர்
தீயவரீடறு மேன்மைகொள்வாரோ
சீதளகோமள வாசகநாவலர்
தேளனையார்மிசை பாடல்சொல்வாரோ
சீதையின்மால்கொளி ராவணனேர்பலர்
சேயிழையார்வெருள் கூறல்செய்வாரோ
தீதறுதாடகை நேர்பலமாதர்கள்
சேய்வதையாதிசெய் தேமகிழ்வாரோ
தேனுவைநேர்பசு வூனுகரீனர்கள்
சீறியெலோரினு மேனிகழ்வாரோ
தீங்கர்கோபம காரதர்நீதியில்
சேகரராவிகொ ளாதமைவாரோ,(வஹ)

சீலமுறுமறை நாலினுமோதிய
தீவிரமாநெறி யாதுமுனோவோ

சேயபுனீர்கிணை மாரமுதோடுறழ்
தீனியெனேனைய தாழ்மையுறுவோ
சேறுறுவாரிதி யாடைகொள்பார்மகள்
சேமமெலாமுறு மேன்மையெய்தாளோ
சீகரவாழியி னூடமுதோடெழு
சீர்மகண்மேலவர் பான்மருவாளோ
தேயமெலாமுமொ ரேகுடையூடுறு
தேசுடையானது கோனிலவாதோ
தோலராவுல கோரையுள்காவலர்
சேர்பலகோனிலை யாதழியாவோ
தேவர்குழாமிக நாணவெனூடுபல்
சேதிசொனுயல வோவவைபோலே
சேவயமூடிக மாளிபுளேறிய
சேவையெலாமெதி ரேதருவாயே, (௯)

யூனமுறுவெளி யாகியுறுதுய
ரோகைமகோததி மேயபிரானே
யூமைகளேமிகர் பாழ்மதவாதிக
ளோர்வரிதானவி னேதமுளானே
யூடியமாதனை நேரடியாருட
னூதியமீகிற தாமொழிவானே
யோசைகெடாதன வானபல்வேதமு
மோதியசீதியெ லாமுணர்வானே
யூழ்வினையேபெரி தாமெனநாடிடு
மூறுடையார்கள்ப ராவரியானே
யூசலெனுமன மாடலுறுதவு
பாசனையோருட னேயுறைவானே
யோகமதேதுணை யாமுயல்வாருள
மோவரிதாமது பூதிசெய்வானே
யூசரபூமியை நேர்பகர்சீர்கொளு
லோபியராவல்கொ ளாவிறையோனே,(௨௰)

யூதையிலேபடு தூலமெனுவெளி
தோடிடவேபல நோய்களைவானே
யோய்வுறுமோனியர் தேறுமகாரவு
காரமகாரமல் கோர்மொழியோனே

யூர்தோறும்வாழ்மனை தோறுமெநாளுமு
ருவிரவாறுகர் வாருறவோனே
யோதிமமேவிகர் மாதர்சிலோர்தம
தூகமதூடும்வி ராவியகோவே
யூனுணலேகுண மாமெனுநீசரு
லாசமெலாமடு வாருரவோனே
யூசியினூடுது வாரமதால்விணி
லூர்சுடர்நாடிளை யோருணரானே
யோதமெனுவெழு சேனைகள்கோவென
வோலுமகாரத வீரர்தம்வாழ்வே
யூருணிநீர்பொரு சிர்பெறுபேரறி
வோர்கரவிகைபி னூடளைவானே, (௯)

யேனமதாலொரு வேடுவனுனம
யேசனெனுமொழி வாரைவிடானே
யானைகராவத னுன்மடியாதரு
ளிடுசொல்வார்தொழ மாயவனுனு
யேசறுபேரொலி வாகனனுவுண
வீபவருமெருழி சீர்புரிவானே
யேதமில்வேல்கொடு தோகைமயூரம
தேறிவிணுடியு மாறுசெய்தோனே
யேழ்கடல்சூழ்புவி யோர்விளையாவுமெ
நாளும்வராவறி பானுவுமானு
யிரிருதோளுடை யாதியமாதமொ
லோர்களுமாய்விளை யாடவொல்கானே
யேமமதாமுல கோர்முதலாமுயி
ரியாவினுமேவியு மேவுகிலானே
யேவமொவாறுணர் போதுமவாமெருளி
ரோகவிராமய பூரணநாதா,(௰)

வீழமுளாரைவென் மாதவனுதிய
ரோடணைதீர்நல மேவவுள்வானே
யேனுறுமோர்புளி யூடுறைவானுட
னேயவர்பாடிய பாவனைவானே
யேழையர்சேகர மாமலையாரையொ
ரோகவியான்மலை மேல்விடுவோனே

யிடறுசீர்மல யாசலமாமுனி
யேகியவாறுணர் வார்கள்சகாயா
வீரமருமலர் வாளினையாமக
ளீகைவலானேமு னீயவொல்வானே
யினமில்பாநுவல் வானுடனேயவ
னீனியபேதையெ ஞானடைகூர்வா
யேசியதேசிக ஞசையினாலலே
யேவிழவோடின னேர்தவர்பேறே
யானறிநீதனி யேயெனுஞானிக
ளோணியின்மேனிலே யா முதல்வோனே. (௨)

தனனதந்ததன தனனதந்ததன
தனனதந்ததன—தனதனதனனு.

முதலேயுண்டமக வினையுமிழ்ந்துதவ
மொழிதருங்கவிக ளுலகினிலிலேயோ
முரணுறுஞ்சமண மதமழிந்தொழிய
முனேமலிந்தகழு மரநடல்கதையோ
முதியதொண்டனொரு வனேயிடுங்கடலின்
முறைபிறழ்ந்துசிலே கரைவரல்பிழையோ
முடையுணும்பிடகர் மதமறும்படிசெய்
முனிவனம்பரம தனில்விரவிலனோ
முதலெனுஞ்சொலொரு தரமொழிந்தகரி
முறையுணர்ந்ததிரு வுளமிருள்படுமோ
முகமனின்றிவெகு ளிரணியன்றனிகன்
முடிவுறும்படியொ ரரிவரல்படிறே
முகுளகஞ்சனிகர் வகுளபுங்கவனோர்
முதிர்பெருஞ்சுளியி லுறுகதிபழுதோ
முசுடரஞ்சவொரு கிழியறுஞ்செயல்செய்
முனேவனும்பிறரு மருள்வசரலரோ, (௩)
முகடடர்ந்திமைய வரைமுனிந்தகய
முகனேவென்றகண பதியுனதயலோ
முதிரையுங்கனியு மவலெனுண்டைகளு
மொகுமொகென்றிடுந ரிடர்கெடல்புதிதோ

முலைசுரிந்தகிழ வனிதையொண்கவிசெய்
முகமொனுந்தொனியி லுவகையெய்திலையோ
முனிவுறும்பகைவன் விடவின்வந்தெனிடை
முனமவிர்ந்தசா தமுமறைவுறுமோ
முடிபெறுந்தருவ னுடல்பிளந்தெறிய
முருகனென்றுவா லுனையலதெவனோ
முகையுறழ்ந்தகுச யுகளகுஞ்சரியு
முருடமங்கையுநல் கியவாமெளிதோ
முயலுடும்பனைய வுணலும்விண்டவனை
முகிறவழ்ந்தசிக ரியிலகுளிலையோ
முசுமுகங்கொளொரு மனிதனிந்திரனை
முனல்கனென்பவனை வெலவுதவிலையோ, (வ)

விதழ்மலிந்தபல கமலமுங்களியெய்
திடவருபரிதி யறிவறுசடமோ
விரலையொன்றுபனி மதியையுண்டுமிழு
மியல்பறிந்துமுணர் விலதெனல்சரியோ
விளமடந்தையொரு புதல்வனன்றுதவ
வினையில்குந்தலம தனின்முனணிலையோ
வெரிபொருநுகலியி னடுவருந்துமென
திதயமுந்தெரிய வரல்பயனிலதோ
விமயமங்கையென வழிபடும்பனவ
னினிதருந்தவமு தடுதல்சொலிலனோ
வியல்வளர்ந்தநகர் தனிலொர்வெண்கவிசொ
லியுமொர்தொண்டன்மிடி களைதல்பொய்படுமோ
விருள்பொதிந்தகுழன் மகளிர்தம்படைகொ
ளிறைதொடுங்கணைவில் வலியுனதலவோ
விகல்பெருந்தருவ னொருவனங்கழிய
வெழில்பெறுங்கைவிர லுதறலெணிலனோ, (வக)

விளிமறந்துமயிர் பறிசெயுஞ்சமண
ரிசைவினுங்கருணை நலமறிகிலனோ
வெவையிறந்திடினு மவைநுகர்ந்தபிழை
யினரினுஞ்சிலர்மு னலமருவிலரோ
விளகுநெஞ்சமொரு சிறிதுமின்றிமக
ரிணர்பொருங்குறிகொய் பவர்களுமுலவா

விடமெனுங்கதிநல் கிடுபெருங்குரவ
  ணிதமில்வம்பர்சிலர் கொலைசெயமடிவோ
னெனமுடங்குதொறு நுவல்குணுங்கர்களு
  மினையபுன்சமய ரொவர்களுமுனையே
யெமதுசொந்தமென வமர்செயும்புவியி
  னிடைபிறந்துமவை முழுதினுமமைவா
யெதினுமொன்றுகிலை யெனநினன்பின்வழி
  யெளிதுணர்ந்துசது மறைநுவலியமு
விருமதம்பொலியும் விழைவுகொண்டுதொழு
  மெனையிவண்டளர விடுவதெனுனையாய், (௭)

மதமனந்தமுன துருவனந்தமெனும்
  வகைதெரிந்தவரு மறிவருமுதலே
மழைபொழிந்துலகி லசரமுஞ்சரமு
  மலிவுறும்படிசெய் திடுதனியரசே
மனையினங்களுட னிணமுமுண்டுதுயின்
  மலினருஞ்சிறிது தொழுதிகழ்பொருளே
மசகமென்றசிறு பறவையின்கணிமை
  வடிவமுந்தெரியும் விழியுறுபரமே
வரதமும்பொருவி லபயமென்றுளிர
  மனநலங்கொள்சிலர் கனவினில்வருவாய்
மகிழ்வுடன்றுதிசெய் திடலொழிந்துபெரு
  வசைபுகன்றவரு முயும்வகைபுரிவாய்
மதுரபுஞ்சநய மொழியியைந்தகவி
  வனைதரும்புலவர் விழைவனவருள்வாய்
மலயமன்செய்தமி ழலதொர்தஞ்சமிலர்
  வழிபடுந்தவசி லதிவிழைவுடையாய், (௮)

மனிதர்தஞ்சமென நினையுநெஞ்சினிலு
  மருவும்வம்புபட நிறைபெருவெளியே
மணமிகும்புகையு மறல்கொள்கும்பமுநன்
  மலர்களுங்கொடுசெய் கிரியையையிகழாய்
மகுடமொன்றுதலை யரசரின்பமிகழ்
  வயிரமொன்றுகிலை யினர்தமையகலாய்
மடையர்தங்களைவில் விசையனிந்திரன்மன்
  மதன்முகுந்தனெனு மவரொடுபழகாய்

வனசம்வந்தசது முகவிரிஞ்சர்பலர்
மறைகளுங்கடையி னுவலொருகதியே
மமதைதந்துபல விதவிடும்பைசெயு
மலமொழிந்தசுக வுததியினமுதே
மரணமுந்தொகையில் பிறவியுந்தவிர
வரம்வழங்குகரு ணையினுயர்வுளதே
மடமைதுன்றுகிளை யினர்நெருங்குதலின்
வருபெருந்துயர மறவெனவளைவாய், (௯)

கதறுகின்றபசு வினமகிழ்ந்திடல்செய்
கவலைகொண்டவர்கண் முடிதொறுமமர்வாய்
கயிறுகொண்டுவரு நமனைவென்றுமிரு
களியடைந்தவர்கள் பலரையுமயில்வாய்
கலிவெருண்டயரு நலநினைந்தடியர்
கழறருந்துகளு மணிகுநர்தவமே
ககனமஞ்சவெழு தருவகண்டகர்கள்
கருதிடும்படைக டருமொருதருவே
கலகலென்றுபல மொழிபுகன்றிகல்செய்
கடையர்தந்தமது பொருளெனுநடுவே
கருமமன்றியொரு பெருமையின்றெனுரை
கழறும்வண்டர்கரு தரியநன்மணியே
கரியசிந்தையிடை மிகுமகந்தையுறு
களையுறழ்ந்தவரை யடவெழுகனலே
கரடதந்திமிசை யுலவுதுங்கர்சிலர்
களையிரந்துழல விடலும்வலவனே, (௧௰)

கயிலையங்கிரியின் மிசையலங்கிருத
கவுரிபங்குறைய வளர்தலுமுடையாய்
கடுவுமிழ்ந்தசத பதசிரங்கொளணை
கவினுமம்பரம தனில்விழிதுயில்வாய்
கவளமுண்டமத கயமுகங்கொளொரு
கடவுளென்றுமுல கிடைதிகழ்பெரியோய்
கதிருமிழ்ந்தவயி லொடுசிகண்டிமிசை
கனவில்வந்துபல நலநுவலொருவா
கலசவந்தணன துரைவிரும்பறுவர்
கடமையுங்கொடுவிண் வழிவருசுடரோ

கனகபம்பரம தனையகொங்கையுறு
கனையினின்றுலக முழுதருள்பவையே
கபடமொன்றியபு னெறிகொளுஞ்சிறுவர்
கறைபடுந்தகைமை யளவிலுநிகழ்வாய்
கதுமைதங்குமறி வுறுபெருந்தவர்கள்
கணிதமென்றறிலை முழுதுளகுருவே. (௩)

தனனதன தானதன தந்தந்தனனதன
தனனதன தானதன தந்தந்தனனதன
தனனதன தானதன தந்தந்தனனதன—தந்ததானு.

குருபதமலாதுகதியுண்டென்றமூடரொடு
பழகியவர்போம்வழிதொறுஞ்சென்றுவானினிடை
குலவுமமராபதியிடந்துன்றுமாதர்மயல்
கொண்டிடாதே
கொடியகுணமியாவுமருவுந்தண்டவேனன்மொழி
களுமுதியவேதவிதியென்றன்பினேடுபுரி
கொலைமகமுனைபலவும்புங்கொள்வார்களொடி-
ணங்குறுதே
குறைஞமலியாநியனவுண்டின்பமாகவல
வுதிரநிணமாமிசமெலும்புங்கொள்வார்கரிய
குடைநிழலினூடுளபெருந்துன்பவாரியில
மிழ்ந்திடாதே
கொடையறிகிலார்களைவலிந்தண்டர்நாதனென
வலிமிகுமுராரியெனவம்பொன்கலாபியிவர்
குகனெனவேநாளுமொழியும்புன்சொல்வாணர்முன்மெ
லிந்திடாதே
குளிர்மொழியுமாறுமனமுங்கொண்டுவானவரின்
முனிவருயர்வாமொருநிசங்கண்டுபேணுமுயர்
குணமில்சிறியோர்களைவிரும்பும்பொலாதவினை
மிஞ்சுறாதே
கொதிகடலுநீடுபலகுன்றுஞ்சராசரமு
முதவல்பரமாகுமெனினுஞ்சண்டைபோடுகிற
குருடரனையாரொதிரொதிர்ந்தன்பில்வீண்மொழிகள்
விண்டிடாதே

குறுமுனிவன்மாதவமுயன்றும்பரூரமிழ்து
மெலிவடையுமாறுதவுமெண்சந்தமேவுதமிழ்
குறைவுடையதேயெனவிளம்புங்குரூரர்முனை
யஞ்செயாதே

குழியில்விழும்வேழமெனநொந்தஞ்சிவாடவிடு
மிடிவளைதலாலுயர்தவங்குன்றியார்வமிகை
குலையவெனையாருநகவிங்கிந்தவாறறிவ
ழிந்திடாதே,(௬௰)

குதிரைவிலையாடவெனவன்றங்குபோமொருவ
னரியபரஞானநிலைகண்டின்பமாரவருள்
குழகனையார்வரவெணுந்துங்கமேனிலைபொ
ருந்திடேனோ

குடிமுழுதும்வாழவருமைந்தன்றன்மேலிகழு
மிரணியனதாவியுமகந்துன்றுகோபமொடு
குருதியுமனாணுகோராசிங்கந்தன்வார்கழனி
னைந்திடேனோ

குடுகுடெனவோடுமொருகுன்றென்றவாகுமிசை
பவளமலைபோனிலவுமைந்தங்கைவேழநுவல்
குதுகுலமதானமொழிவமபென்றெணுதுளம
கிழ்ந்திடேனோ

குவடளவில்கோடியினுநின்றன்பரோடமரா
தொழுகடனமாடியபதந்துன்றுசேய்தனது
குறியகிளிதானெனவெனெஞ்சின்கணேநியதி
லங்கிடாதோ

குருளைபடுமாசுணமுநஞ்சங்கொளாமகிழ
வருபரிதிநாதனெதிர்தெண்டன்செய்தோதென்மொழி
குயிலமெனவானவர்களுங்கண்டுதேறிடமு
ழங்குறுதோ

குவளைமலர்நாணமலர்கண்கொண்டகோகிலம
தனையகவுமாரிதனிளங்கொங்கையூறமுது
கொடுகவிதைபாடியபசுங்கொண்டனோர்புகழ்பு
னைந்திடேனோ

கொடுவரிகொளானுயிர்பெறுஞ்செஞ்சொலோதியெழி
லருணைநகர்நாதனிலையங்கண்டுவீடுபுகு
குகைநமசிவாயனையவன்றொண்டனுதியனை
யொன்றிடேனோ

குயிலியவியாசனொருவன்சொர்ந்தநூல்களிடை
சமரசமுறுமலிகலுஞ்சிந்தைதோய்சிறுவர்
கொதுகெனவெளாதுபணியும்பொங்கவாழ்வினில
மைந்திடேனோ, (வ)

வருவுருவமாகியவகண்டஞ்சதாசிவமெ
யொருபிரமமாமெனவுணர்ந்தொன்றுமேலவனை
யசடுமெலிதீயவொதிர்ந்தந்தியோடுபக
னிந்தியாரோ

யபிநயவினோதநடனங்கொண்டவேசியர்கண்
மனையிடைசதாநிதமிருந்தொஞ்சுறுமனதொ
டவர்பணிசெய்வாரிடநடந்தின்சொல்வாணர்மிக
நொந்திடாரோ

யயனருளும்வேதமுமரன்றந்தவாகமமு
மொருநிலைமையேபகர்விதங்கண்டசீரியனை
யவையறிகிலார்நகுதலுந்தொண்டராருயிர்ந
டுங்குறுதே

யரிபிரமராதியர்நிணந்தின்றலீனமல
வெனினுமதுபாவமெனநெஞ்சஞ்சிடாதுசொலு
மருணிலையுளாரையும்வளைந்தங்கிநேர்கலிநி
தஞ்சுடாதே

யதிரதமகாரதர்வணங்குஞ்சுபாவகுண
முறுபரமயோகியர்கணெஞ்சும்பகீரெனவெ
ணரியகொலைநாடொறுநடந்தந்தவூனுலக
ருந்திடாதே

யபரிமிதமாகவளருங்கொங்கைதோயலகை
மகளைமலையோடுதுணிகண்டன்றுகிரனுவ
லகவல்புனைவானனையருஞ்சந்தமோதிடினும்
வஞ்சியாரோ

யருமைபெறவோர்கவியுடன்சென்றுமீள்கருணை
மருவுதிருமாலனையருந்தங்கையாலெழுதி
யடகுதவுமோலைமுறியின்பொன்றராதபிழை
யுஞ்செயாரோ

யயிலைநிகரானவிழிகொண்டன்பராவிகவர்
கணிகைமகளூடலறவுஞ்சென்றசீர்புனையு
மரனையர்பாடல்பலகொண்டுங்கொடாதிவணி
ருந்திடாரோ, (வரு)

யவல்பயறுமோர்தகமருந்துங்கணேசனிகர்
பெரியாருளான்மொழிதருந்துங்கவாசகமு
மதுலபலமாயிரமுடன்றந்திடாதொளிம
ழுங்கிடாதே
யளவில்பலபோதுகனவின்கண்டொடாதுதின
நனவில்வரல்போலலரிவந்துஞ்செய்பாவபய
னழலிலிடுபூளையிலெரிந்தங்கருவணம
லிந்திடாதே
யகிலமுழுதீனியவிளங்கொம்பனுள்சரத
மனமறியவாடல்களனந்தஞ்செய்தாலுமிடி
யறுதலுமுருதுவளரும்பங்கமாயிரநெ
ருங்கிடாவே
யவனவளதோவியபதங்கண்டுநாடியுமொர்
கதைபகருநூல்வழிநடங்குஞ்சிறுர்சமய
மனையுருவநாமமும்வெகுண்டுஞ்சில்போதுளிலி
லங்குருவே
யமையினிடையீசன்முனையென்றுந்துமாநகரி
லெனதுடலொர்பாலனில்வருந்துங்கமாமனையி
லலையெறியுமோசைமலியுஞ்செந்தின்மாநகரி
லந்தவூரா
லணிகொளுருமாமலையுறுஞ்செம்புமாநதியி
னெடியதிருமாமலையிலன்றங்கியானமலை
யருகருணையூரிலுயர்செங்குன்றிலாடகம்வ
ளைந்தசிர்தோ
யவைநிலவுமூரினிலரங்கந்தனுதடிமை
விரதம்விடுவானுறுதலங்கொங்கைநாணமறு
மரிவையர்தநாடுவளையங்கங்குகூறியவி
தஞ்செய்தாள்வாய்
யறிவறிவதாமநுபவங்குன்றிவீணிலழி
வுறிலுனதுசீரருள்பெறுந்துங்கமாமுனிவ
ரறையுமொருகோடிகதையுங்கொஞ்சமேனுநிச
மென்கலாமோ, (௨)

சருவசனதாரகசுகந்தங்குலாவுமலர்
வகையணியுநாயகதிகந்தந்தொறேகிவரு
தவமருவுயோகியருணர்ந்தன்பினுல்வழிப
டும்பிரானே

சகுணபரயோகசரதந்தங்கிடாதபெரு
முடமையொடுமாதவரிடுந்துங்கவேடமிடு
தகையினைநானிலமிகழ்ந்தஞ்சிடாதுமிதல்
கண்டுளானே

தமையனையவேயுயிரனந்தங்கடாமுமெனு
முறுதியதனெலொருபுலுங்கான்புகுதுமல
சலமும்விடுவேதியரினந்தங்குமவீடுதொற
மார்ந்தமேகாவே

தகரினொடுசாகமுமரிந்தங்கிவேள்வியெதிர்
குயவொருகூறுகொளவுண்டின்பமாமிழிவு
தனிலிசையுமீனகுணமொன்றந்தனுளனாவி
ரும்பிடானே

சரதமனுநீதிதருமங்கொன்றுணைமையிக
லடுசமரவீரமுதலொன்றுங்கெடாநரசு
தனைமகிழுமாறுமுயல்பண்பொன்றுகாவலவர்
நெஞ்சுளானே

தழல்வெருளுமாறுதழையும்பஞ்சநோயினிடை
யுலகழுதுவாடுறினுநம்பங்கிலோர்சிறிய
தவிடளவுமீகிலமெனுங்குண்டராசர்குல
முங்கொல்வானே

சகசமெனவூரிடைவழங்கும்பலோர்முறையு
மதுபகருநான்முறையும்வம்பென்றுவேறுவழி
தனமலியுமியோசனைசெயுஞ்சண்டிநாய்கரழ
வெம்புவானே

ததிமுடுகும்வேளையினுமம்பொன்கொள்வார்கடரு
பலிசையினிலாசைமிகும்வம்பின்றிவாழ்வணிகர்
தமரவர்சகாயமெனவுந்துன்றிநாடொறுந
லஞ்செய்வானே,(௨௫)

சரணசனராமவரிலென்றுநதனேரில்வரு
மிரவலர்கள்வேணவைபெறுந்தஞ்சமாகிலவு
தகுதிகொளவேமிகவிரும்புங்குணுலனாய
கன்றிடானே

தமனியமகாமலையெனுங்கும்பலாகியநெ
லுறுகளமதூடுமுதவும்பண்புறுதசில
சதுரர்குடிகேடுபுரியுஞ்சிந்தைதோய்தருசி
னங்கொடானே

சலசமலரோன்மறைவிளம்பும்பல்வானவர்த
முறைவிடமதானபசுவுங்கன்றும்வாழல்புரி
தனிமகிமையாளரிதயஞ்சென்றவாறுதிரி
கின்றதேனே

சருவனையதானிணமெனும்பஞ்சபாதகனை
மருவியவர்சீவனமுயன்றுய்ந்தபேருமெரி
தருபெரியகோரநரகின்கண்சதாவுழல
வுந்தள்வானே

சகதிநிகர்பாழ்மதமழுந்தும்பொலாரெனினு
முயிர்வதைசெயாதவிரதங்கொண்டுவாழிலவர்
தவளமதவேழநகரந்தங்குமேன்மையுற
வுந்துவோனே

சமயநெறியாவனகடந்தந்தராதியர்கண்
மருவுபதமியாவையுமிகழ்ந்தெங்குமாகிநிறை
தனையிடைவிடாதுகருதுஞ்சொந்தராவியிலு
றிஞ்சுவானே

சரசகுணசாகரமெனும்பெண்கள்சேனைநடு
வருமதனுமேமனுமிருந்துன்பமேயுதவு
சனியன்முதலோருமுனையன்றின்றென்வாயினரி
டம்புல்வானே

சமரசமதானநிலைநின்றெஞ்சுறுதவருள்
பெறமுயல்வலோரெதிரிகழ்ந்திம்பர்பேசரிய
சபதமொழிவார்திரள்வெருண்டொஞ்சுமாடல்செயு
மின்பவாழ்வே, (௫)

புருவநடுநாடகமிடும்புங்கவாகருணை
மழைபொழியுமேகமுறழுஞ்சிந்தையாயளவில்
புவனமுமெளாமல்விழையுந்தங்கமேயனைய
பண்பினனே

புனிதமிகுபாடல்விபரங்கண்டிடாதுபல
மனிதர்புகழோதிமகிழும்பங்கமேயசில
புலவரறியாதபடிநின்றன்பரோசனுமு
வந்துளானே

புரையில்கருணாகரபுசுண்டன்பல்கோடிபிர
ளயமுடிவுகாணவருளுங்கண்கொள்வாய்களப
புளகவிளமாமுலைமயங்குஞ்சிலோரடிமை
யுந்தளானே

புதுமையறுபூரணமதென்கின்றபெருநிறை
யொடுகனமுநீளமுநினைந்துங்கணுளர்பலர்
புரிவடிவகோடிகளிலொன்றென்றுநாடுநரு
நம்புபேறே

புயலனையவீகைமருவுஞ்செங்கையாளர்களை
நணியிகழுமேலாபியர்பசும்பொன்பன்மாமணிகள்
பொதிபொதிகளாவுறினுநொந்தஞ்சிவாடவிடும்
வம்புளானே

புழையுறுகைவேழநுகருஞ்சிங்கவூனுதிர
நுகர்சரபமேயனையரும்பந்தமானசிறு
புழுவினதுவாயிடைவருந்தும்பொலாமையும்வி
ளங்கநேர்வாய்

புகழளவிலாதனபெறுங்குன்றமேயணுவி
லணுவுநிசஞானமிலருங்கொண்டுவாழுமிழி
பொருளினிலுமால்கொடுதளர்ந்தொஞ்சுவேனையும்வி
ழைந்ததாளா

புரிசைமிசையாடுகொடியண்டங்கொணீர்பருக
நெடியதெருவீதிகளனந்தங்குலாவவளர்
புலிசையிலநாளதுபகர்ந்தந்தவாறுசெயல்
சிந்தியானே,(௫௰)

புயபலமுராரியெனவந்தங்கொர்பாடல்பக
ரெனவினவியாடியுநெடுஞ்சந்தையூடுதனி
புகுசிறியநாயெனநடுங்கும்பல்வாதனைத
ரும்பெமானே

புணரியலைவாயிலருடந்துய்ந்துபோகவழி
விடுகிறதுபோன்மிகமொழிந்தென்சொன்மாலைபல
புனைதலுமொரார்வமுமுடன்றந்திடாதுவிடு
தெம்பிரானே

புகலரியதேவர்பலரொன்றென்றனுதுமன
வெளியிடைநிலாவியுமிகங்கண்டுபேணவொரு
பொழுதினிலொராடலுமுயன்றின்பசாகரம்வ
ழங்கிலானே

புவியிலுளபேர்பலர்நகுந்துன்பநோய்மலிய
வொருபெரியபாறையிலிடந்தந்துகூபமெடு
புனல்பெருகியாறெனவருங்குன்றிடாதென
நவின்றவாயா

புலிகரடிநாய்நரிகுரங்கென்பவாதியபல்
விருகங்கர்தீயகுணமொன் றுமபொய்வாதர்மிகு
புலைகொலையினொடுமுயலுங்தொண்டுநீடியல்பு
முன்செய்தோனே
பொறைசிறிதுமேவலில்சினங்கொண்டுமேன்மைபெறு
பழையதுருவாசரொடியங்குஞ்சிலோருமெழு
புகைவழியலாதகதியுங்கண்டுதோய்வுறவி
ரங்கினனே
புரளுநிலையாளர்களின்முந்துங்கிலேசமொடு
மடமைமலிதீயர்வசையுங்கொண்டுதாழ்வினிடை
புலருமடியேனுமிவணநதொண்டுநாடவிடும்
விந்தையானே
பொருவிலறுகூலமுதவும்பண்டைநாதனெனின்
மகிழுமொருவாவுலகனந்தமபல்கோடியுள
புரவலநிராதரநிறைநதெங்குமியாவினும
மைநதசேவே. (௪)

தானதத்தன தானதத்தன
தானதத்தன—தனதனதானு.

தேவருக்கரியவாழ்வுறக்கருது
சீர்படைத்தவர்கள் கழல்பணியேனோ
சேதனத்தையுணவாமெனக்கொள்பல
தீயரைக்கறுவி யகமகிழேனோ
சேலையொத்தவிழிமாதரிச்சைவழி
சேறலற்றதவ மிகமுயலேனோ
தேனின்மிக்கதமிழானினைத்தபடி
சேண்வியப்பநில மிசைபுரியேனோ
சீகரப்புணரிநீர்குடித்தமுனி
சேவைபெற்றளவில் புகழ்புனையேனோ
சேவதைப்பவர்கண்மேல்வெறுப்பிலவர்
சேகரத்தையடி யொடுதகியேனோ
சீலமற்றநடைதோயரக்கரொதிர்
சீறிடிற்பொருது செயமருவேனோ
தீவிரப்பகுதியானபக்குவர்கள்
சேரநத்துகுரு வெனமிளிரேனோ,(௫)

சேயழக்குழிகொய்வார்முதற்கொடியர்
 தேசழித்துலக முழுதுலவேனோ
தேயமத்தனையுமோர்குடைக்கிடைகொ
 டரனுக்குமணி முடிதரியேனோ
சிவமுத்திரையினால்விளக்கமுறு
 தீதுடைப்பொருள்க ளழிதல்செயேனோ
தேடிவைத்தபணமாவியிற்பெரிய
 தேயெனச்சொல்பலர் பரிசழியேனோ
சீதளக்கமலம்வாழ்விதித்திரள்செய்
 தேகமுற்றுழலும் வினையொழியேனோ
சேயபுட்பரியிலேறுமச்சுதர்கை
 சேர்படைத்திறமை யினுமுயரேனோ
தீயும்வெட்கவருகோபருத்திரர்க
 டேய்வின்முக்குடுமி களையும்வெலேனோ
சேவல்பற்றியகைவேளுருக்கொடுசொல்
 சேதிமெய்ப்படவி னிடைகலவேனோ, (வ)

பாவமுற்றுமறுமாறொழித்தறுவர்
 பாவனைப்படிநி னருளிலகாதோ
பாரதத்திலுயர்வானயுத்தமதி
 பாதகத்தரசர் தமைநசியாதோ
பாசமற்றபரஞானமுத்தர்சிலர்
 பாழ்மதப்பதிதர் களியொருவாரோ
பாகமுற்றமொழிதேறுமெய்ப்புலவர்
 பாடல்சொற்றபடி நடவல்பெறாரோ
பாகையொத்தமொழியார்தமைத்தனது
 பாகம்வைத்தவனை யிகழல்கெடாதோ
பாணிபற்றுகிலர்நூலிழக்குமவர்
 பாலரைக்கொலைசெய் திடறவிராதோ
பாணம்வெட்கும்விழியார்களைப்பல்விடர்
 பாடழித்தழுது லையவிடுவாரோ
பால்கொடுத்தபசுவூனுகச்சுமவர்
 பாரிடத்திலதி மகிழ்வடைவாரோ,(வரு)

பாணனுக்குமதுராபுரிக்கணொரு
 பாசுரத்தின்மிடி களைதலும்வானோர்

பாழிமிக்கவசுரோசருக்குடைதல்
பாறிடத்தணமு தருளலுமானோர்
பாவையைக்கடிசெய்தீயுமுத்தலைவர்
பார்வைகட்கெதிரி லுருள்சிறுதூணோர்
பாரமிக்கபனையாய்நொடிக்குளுயர்
பான்மையுற்றகனி யுகுதலுமோர்பேய்
பாசனத்துணவெனுவெடுக்கவெருள்
பாவலர்க்குவகை தருதலுமோர்நாள்
பாரதிப்பெணுவனூலினைப்பிறிது
பாடினற்கடிசி லிடுதலுமேலூர்
பானுமுற்புரியுநீயெனக்கினிய
பாரசித்திகளு மனவெளியூடே
பாவனைப்பரமஞானத்தத்துவசு
பாவநிச்சயமு மினிதருள்வாயே, (௯)

காவலர்த்திரளெலாநடுக்கமுறு
காரணத்தலைமை பெறுமொருகோவே
காமனைப்பிரமதேவனைக்கொலைசெய்
காலனைக்கறுவு மவர்துணையாவாய்
காணமிக்கபொருளாமெனக்கருது
காதலுற்றவர்க ளறிவரியானே
காதுதற்கொரணுவேனுமச்சமறு
காசுடைப்பிசித ரணுகவொணுதாய்
கானகத்துமறவேடரிற்சிலர்பெய்
கான்மலர்த்துணரு மணியும்விணோதா
காவியிற்பெரிதுதோய்கலைத்துறவர்
காரியத்திலனு தினமுயல்வோனே
காகமொத்தினமதோடொருப்பபடும்வி
காதமற்றகுண முடையவர்பாகா
கால்பெறிற்கதியெனுவுழைத்தசில
காமியத்தவரு மதுபெறநோர்வாய், (௨௰)

காருமட்குமதியீகைகற்றுளம
காரதர்க்கினிய வுதவிசெய்வோனே
காசிமுக்கியமெனுநடப்பவர்கள்
கால்வலிப்பயனு மினிதருணேயா

காகளத்தைநிகர்தாள்படைத்தசிறு
காரிகைத்திரளும் வழிபடுநாதா
காணியுற்றபடிகோடிபெற்றநிலை
காணுமுத்தமர்கள் கருதுசகாயா
காய்சினத்தருவராதியர்க்குமதி
காரமுற்சொல்சில நலமுதலீவாய்
காசினிக்கிடர்செய்வார்களைப்பெரிய
காளிகைப்படைக ளுணவடுகோபா
காமுகக்குழுவின்மேயபத்தர்கள்வி
காரமற்கவிழை யினுமுனியானே
காழகத்தையிகழ்சாரணர்க்கொலைசெய்
காழியிற்பனவ னனையாசொல்வீழ்வாய், (௩)

மாவசிக்குமுரநாரணற்றுதிசெய்
வார்தமிழ்ச்சொன்மறை யெனின்மகிழ்வானே
வாரணக்கடவுளாவழுத்துமொரு
மாதுசொற்படிபல் வகைசெயுமாரவா
வானகத்துமலர்பூமியிற்கொணரு
மாணுடைக்கிளிகொள் குகனெனவேநான்
வாழிசெப்பிடவுமியானனைத்துமென
வாயதிறக்கவரு மருமையுளானே
மாகமுட்டுமிருணுசமுற்றிடல்செய்
வார்கதிரச்சுடரை வழிபடுமேலோர்
மாதிரப்பகுதிதோறுமெச்சுமறை
வாசகத்தின்முடி விளிலமர்வானே
மாதரிக்கடிமையாமவர்க்குளிழி
மாமிசப்பிரியர் தமையணையானே
மாசறுத்தபரயோகமுத்தரது
மானதப்படிபல் வடிவுகொள்வோனே,(௩௫)

மாரியிற்குறைவில்வேய்வனத்திடைமுன்
வாதுசெப்பொருவ னிகல்களைவானே
மால்வரைத்தலையிலேறிமுற்புவியின்
வாய்விழிற்சிறிய வுயிர்கவரானே
மானிடப்பிறவியாமென்முற்பவமோர்
மாநதிக்கிடையெ னிடமொழிவோனே

மாசுணத்திரளனுளைவிட்டென்மன
வாதனைக்குரிய வசைதருவானே
மாழ்குறப்புவனியோர்களைத்துயர்செய்
வாலுடுப்புரையு மவர்குலகாலா
மாயையிற்றலைமையானசத்திபெறு
மாழையிச்சைமுழு தறநினைவானே
வாழைசுற்றுதிருவேரகத்திலொரு
வாறுரைத்தமொழி களுமறவானே
வாகுவெற்றிமுதலானபொற்புறுமொர்
வாகனத்திலெதிர் வருமிறையோனே. (ரு)

தனனதந்த தத்தனத்தான தனனதந்த தத்தனத்தான
தனனதந்த தத்தனத்தான—தத்ததான.

இறையுமுன்றனக்குரித்தாகி
வழிபடுந்தவத்தைவிட்டாசை
யெனும்விலங்கினிற்படித்தீமை கெட்டிடாதோ
விடிமுழங்கலொத்தசொற்பாடல்
பலவனைந்துசெப்பிடற்கான
வியலுணர்ந்துமத்தநத்தினை முற்றலாமோ
விருபிறங்கலொத்தெடுப்பான
முலைநிறந்தணைத்தணைத்தூடு
மிளமடந்தையர்க்குளுற்றோர்மை தப்பலாமோ
விதுவதென்றுரைத்துரைத்தேசு
மதமனந்தமுற்றநிட்டூர
ரெவர்களும்பகைத்தெனைப்பேச வைக்கலாமோ
விணர்சொறிந்தியற்றுநற்பூசை
விதியுணர்ந்தசித்தரைப்பாழி
விரையும்வண்டர்சற்றுமொப்பாமை யிட்டதாரோ
வெழில்பெறும்பசுக்களுக்காக
மலைசுமந்தகைத்தலத்தானை
யிடையனென்றதுட்டரொப்போர்மி குக்கலாமோ
விருநிலந்தவிப்புறத்தீமை
பலசெய்கின்றவற்பரைச்சாடி
யிணையில்வென்றிபற்றுமற்றோளர் மட்கலாமோ

விமைபொருந்தலற்றகட்டேவர்
புடைநெருங்குகற்பகக்காவி
லியலுழுஞ்சகத்தைநத்தார்த   விக்கலாமோ,(௯)

விபமுகன்றனைத்துதித்திடில்
கயிலையின்கணுற்றநற்றாய்சொ
லினைவிதண்டவித்தைகற்றோர்பு   ரட்டலாமோ

விலகுகுங்குமக்குவட்டோடு
நிகருநங்குகற்பழிச்சாரு
மெமனைவென்றதொத்துமிக்கோகை செப்பலாமோ

விடர்தவிர்ந்தசத்தியத்தோர்கள்
பலர்நடுங்குறப்புலைப்பாவ
மிகநிறைந்துதத்துமிக்கோர   முற்றறாதோ

வெழிலிவஞ்சகத்தினிற்சீத
மழைசுருங்கலிற்கலிக்கோடை
யெழுதலின்றியெத்தலத்தோரு   நட்புறாரோ

வெரியுமஞ்சும்வெப்பமிக்காரு
மிடியொழிந்தடுத்தவர்க்கியாவு
மிடுபெருங்களிப்பென்மெய்ப்பேறு பெற்றிடேனோ

வெதிரில்வந்தழற்பொறிப்போலு
மொழிபகர்ந்தசத்தியப்பேயி
லிகலிடுந்துடுக்கருட்கோப   மற்றிடாதோ

விசைவிழைந்துழைத்திருட்போலும்
வசைமலிந்துதத்தளிப்பாரு
மெனதுசஞ்சலப்பெருக்காழி   வற்றிடாதோ

வினியசெந்தமிழ்ச்சொலுட்சார
மறிவரும்பிணக்கர்கற்றோரி
லிதயநன்குவக்குமுற்சாக   நிற்கலாமோ, (௰)

மறைவிளம்புசொற்களிற்கோது
களையும்வென்றியுற்றசிற்கோலர்
மனிதரொன்றிகத்துதித்தாட   முற்செய்தாயே

மறுவில்கங்கையிற்செலுத்தோட
மதனிடம்பிறக்குநற்பாலன்
வனைதரும்பல்சித்திரக்காதை   யுற்றிலாயோ

மதுரவிங்கிதச்சொன்முற்றோரோர்
கலைமடந்தையைச்செயித்தார்வ
மருவுசங்கரற்கருட்பேற ளித்திலாயோ

மனமறிந்தசற்குருக்கோப
மதின்மெலிந்தளக்கருக்கேகும்
வயிரநெஞ்சனைத்தடுத்தாள நத்திலாயோ

மதுரையம்பதித்திருக்கோயி
னடுவிருந்தவிற்பனக்காரர்
மதமழிந்திடச்செய்முப்பாலை யொப்பிலாயோ

வளிபயந்தபுத்திரற்கிடில்
பரிதிவிஞ்சைசெப்பிடப்பார
வடிவமுங்கொள்பெட்புறக்காத லித்திலாயோ

வழுதிதன்பணப்பொதிக்கார
னொருகுருந்தையிற்றொழப்போயு
மலியும்வஞ்சனைப்பரிச்சேனை விற்றதேனோ

வரைபொரும்பெருத்தகற்றூணொ
டரியிலன்றிடத்தவித்தானை
மடிவிலின்பமுற்றுயப்பேணல் பொய்ச்சொலேயோ,()

வளர்தடஞ்சிறைப்புனற்காழி
நகரின்முன்றகப்பனைத்தேடி
மறுகுமைந்தனுக்கருட்பால ளித்ததேனோ

மணமுயன்றிடத்தமர்க்கூடு
நெடியபந்தலிற்சிறப்பான்முன்
வலிதுசென்றுதிட்டுசொற்சூடி நட்டதேனோ

மதலையொன்றுறக்கமற்றுய
புளியதன்கணுற்றவக்காலம்
வகுளமுங்கொடுத்திடற்காவு ருக்கொள்வானேன்

வழுவையங்கழைத்தநெட்டோசை
யரியசந்தமுற்படப்பாடும்
வகையினுஞ் சிறப்பெனிற்பார்ந கைத்திடாதோ

மகளிர்கும்பல் செப்புமொப்பாரி
நடுவிழும்பிணத்தின்முற்பூசை
மகிழவுஞ்செலற்புதத்தேவன் மனுற்றுளானோ

வணிகமின்கையுற்றிடக்கேள்வன்
முனியுமன்றனைக்கொடுத்தாள
மயிலிவர்ந்துபொட்டெனப்போய சித்தன்வேறோ

மறுவுடம்பெடுக்குமச்சிரு
மறிவரும்பிணக்கர்பற்றின
வழியினுஞ்சில்சித்தியற்றிடு தொட்டிலாயோ

வதனமும்பல்விற்படைத்தோளு
மிருபதங்கண்முற்சொல்பொற்பியாவும்
வருதல்கண்டுவக்குமெய்ச்சேவை நித்தமீவாய், (௨)

கறையொழிந்தபுத்திவித்தார
முறுபெருந்தவப்பிடிப்பாளர்
கருதுசுந்தரத்திருக்கோல மிக்குளானே

ககனமொன்றும்விட்டுநற்பூத
சதுரம்விண்டுகொக்கரித்திறில்
கலகமுஞ்செய்புத்தரொப்போரு நத்தவாழ்வாய்

கதிருமிழ்ந்தபொற்பணிச்சால
மணியுமின்கள்சுற்றிடப்போர்செய்
கழைமதன்கருத்தினுக்கூடு நிற்கணாய்

கரியகுன்றெனப்பகட்டேறி
கொடியதண்டெடுத்தடித்தாவி
களைவதஞ்செய்தூர்க்குணத்தானு ளத்துமோவாய்

கதிதருந்திறத்தினிற்கூடி
யொலிசெய்மந்திரத்தைமுற்கூறு
கமலபுங்கவர்க்குமிக்கார்வ மிட்டநேயர்

கடுவடைந்தபற்கண்மிக்காரு
நெடியவங்கதத்தினிற்பால்கொள்
கடலிடங்கிடக்குமைக்காம ரூற்றகோவே

கனலெரிந்தபொற்பெனப்பார
விடையில்விண்டலத்திலுற்றசில்
கனவரங்கள்பற்பலர்க்கீயு மத்தனானாய்

கரிமுகம்படைத்துணற்கான
வுதவுதொண்டனைத்தொடுத்தாளல்
கடனெனன்பருக்குமிக்கோகை யைச்செய்வோனே()

கலசமொன்றிடத்துதித்தானை
யனையரின்புறச்செயக்கோதில்
கவினுறுஞ்சிகிப்பரித்தோகை யிற்குணோர்வாய்

கடிமலிந்தபுட்பமுட்டாழை
யடியின்மைந்தனிட்டவிட்டேரி
கதையைவெண்சொலுற்றநற்பாட லொற்றையாலே

கழறிவென்றிமுற்றுமற்றோள்கொள்
செழியன்முன்பொர்பத்தனுக்கேசில்
கனகமன்றளித்திடத்தாயெ னச்செல்வானே

கடவுளொன்றென்மெய்ச்சொலொப்பாது
பலவெனுஞ் சழக்கர்மிக்கேசு
கவிவரைந்துரைக்குநட்போரை விட்டிடானே

கலகலென்றிலைத்தசொற்பேசி
யமணர்தங்கசப்புடைப்பாடல்
கனியுமின்புடைத்தெனத்தேறு மற்பராவார்

கதறிநொந்தழச்செயற்கான
முதன்மைமந்திரச்செபக்காரர்
கவியையென்றுவப்புறக்காணு நற்குணாலா

கயிலையங்கிரிக்குவட்டேறி
விழமுயன்றமெய்த்தவற்கீடு
கழிபெறும்பவுத்திரப்பேறு செப்பினானே

கணைசொரிந்தலுத்துவிற்காலு
மகுடமங்குடைத்துவிட்டோடொர்
கவுசிகன்குறித்தவப்பேர்கொ டுத்தநாதா, (௩)

குறையிரந்துழைக்குமிப்பேறு
பெறுதலின்றிமுத்தியிற்காசை
கொளுமடம்பெருத்தசிற்றுள ருக்குமாவாய்

குருபதம்பிறப்பறுத்தாளு
மருமருந்தெனக்கொள்கற்பாளர்
குதுகுலங்கொடுத்தெனைப்பேணு தற்கொல்கானே

குறடணிந்தபொற்பதத்தோடொர்
கனவில்வந்துமித்துயர்க்காடு
குலையுமென்றுரைத்தணைக்காதொ ளித்துளானே

குகுகுவென்றகுக்குடக்கோலம்
 வரைதருங்கொடிப்புகழ்ப்பேசு
 குணமதுமபொதுப்படப்பார்வை யிற்செய்தோனே
கொலைதவிர்ந்தசத்துவச்சீல
 மதுபொலிந்துதத்துவச்சோதி
 குழவியென்றுசெப்பவெட்காமை முத்துவோனே
குரகதங்களிற்பல்பொற்றேரின்
 மதகயங்களிற்செல்பொற்பாளர்
 கொடைநினைந்திளைக்கவொட்டாத சித்தியானே
குருதியுண்டெதுக்களித்தாடு
 மலகையுந்துதித்திடப்போர்செய்
 குனிதருஞ்சிலைக்கரத்தார்வி ருப்புளோனே
கொடியிடம்பிணித்தமைப்பீலி
 யணியுமங்கையிச்சையிற்றொழார்
 குறவனென்றுமத்தினத்தாடும் வித்தையானே,(௩௫)

கொதுகொதென்றகட்குடித்தாடு
 முழவர்தங்கிளைச்சியர்க்காசை
 கொடுநெருங்குநெற்பணைப்பால்வ ரப்பின்மேலே
குடவலம்புரித்திரட்சாடு
 மனமலிந்தபொற்புவற்றாத
 குருகைநண்பனைத்தெனக்கூடு தித்துவானோர்
குழுவறிந்துமெச்சிடப்பூமி
 யதிகவின்பமுற்றிடப்பேசார்
 குறிநடந்திடச்செய்விக்காத குற்றமேயாய்
கொதுகினங்களொத்திறப்பாகு
 மனிதரஞ்சிடற்குறித்தேபொய்
 குளறும்வண்டர்கிட்டிலெட்டாத பெட்பினானே
கொடுவிடங்கொள்சித்திரப்பூர
 மிசையிவர்ந்தவித்தகப்பாவை
 குதிகொளுந்தவத்தர்சொற்பார மட்டிலானே
குரவைவிண்டுகொட்டுகைக்காம
 ருடையபெண்கண்முற்படிற்றீர்வில்
 குணலைகொண்டுபிற்செனட்போரு மொப்புதேவே

குருடருஞ்சிரித்திடக்கேடி
லுலகைமுன்படைத்துவைத்தாளோர்
குழகனின்றெனறபார்துய்ப்பாதி கட்குமூலா
குரிசிலென்றுமுத்தமிழ்ச்சீர்கொள்
புலவனொன்றினிப்பிறக்காத
குரவனொன்றுதிப்பவர்க்கான சத்தியோனே. (௬)

தத்தனத்தனன தத்தனத்தனன
தத்தனத்தனன—தத்தனதனனு.

சத்தியத்திறமையற்றபொய்ப்புலவர்
தர்க்கமிட்டெனையெ திர்த்திடன்முறையோ
சத்துவக்குணமிருட்டரைக்கறுவு
சக்கரக்கையர சற்செயலரிதோ
தத்துவப்பொருளெனச்சொனிற்பாவு
தற்கொரொட்பயன ளித்திடிலிழிவோ
சற்பமொத்தெழுசினத்தனைத்தழுவு
தத்தறச்சிறிது ளத்திலெணுவையோ
சட்குணக்கடலெனத்தொனித்தபுகழ்
சற்றவிர்ச்சிதர வெற்றிகல்குவையோ
தத்திரத்துடனடுத்தடுத்துமனி
தர்க்கிதச்சொன்மொழி யச்செயலறமோ
சட்டெனக்கடுகெடுத்தெதிர்த்தறிவு
தப்புசொற்பகர்கு ணத்தைவெலுவனே
தக்கையிட்டசெவியச்சியர்க்கிறைவர்
சத்திரத்தினுமி ரப்பதொல்கிடனே, (௭)

சக்குமிக்குறுமொருத்தனுற்றநகர்
தர்ப்பணத்திலொளிர் முத்தியிலுயர்வோ
சப்பெனச்சுவையிலேத்தசொற்கொள்கவி
தைத்திரட்குமுன்வி ருப்பமெய்திலேயோ
சட்டுவத்திலொருபற்றுமற்றுறுத
வத்தனைப்பிறர்ந கைப்பதுமியல்போ
தத்தலேக்கடலுடுத்தமற்புவிசெய்
சக்கிரிக்குமெனி டத்திகலுளதோ

சட்டைவெப்புறுதினத்துமிட்டுளச
முக்கர்மிக்கடர்த ரச்செயலெவனோ
தட்டறப்பசுவிணக்கையுட்கொள்பவர்
சச்சறப்பொரசி னத்தநுபிழையோ
சட்டமற்றநடைதொட்டதுர்ச்சனர்க
தத்திணுக்கிடைத லெக்கணமறுமோ
சட்டியிற்பலியிரக்குமெய்த்துறவர்
தத்தையிற்குழவு நற்றினம்வருமோ, (௮)

பத்தியிற்பெரியவுத்தமர்ப்பரவு
பக்குவத்தெனைய மைத்திடவலையோ
பட்சணத்தொடமுறைதக்குவித்துன்மிசை
பற்பல்புட்பவகை யிட்டதெணிலையோ
பட்டினத்தடிகண்முற்சொல்சற்சனர்ப
தத்திணைக்கருது புந்தியுமெளிதோ
பத்ததுத்தியரவுட்கொளிற்பதைப
தைக்குமத்தவளை யொத்தழவிதியோ
பட்டிணிக்கிடைதவிந்துநத்தியப
டிக்கருடனிதெ றிக்கிலையடமோ
பச்செனக்குலவுபொற்புடைத்தண்முகில்
பத்துலட்சமுமு னக்கிணைபடுமோ
பற்குனற்பொருவுசிற்சிலர்க்கவிர்ப
டைப்பெருக்கமும னித்ததுகதையோ
பற்றறுத்தபரமுத்தருக்குளவர்
பட்சமெய்ப்படசி லைத்தனையலையோ, (௯௰)

பப்பரப்புளிசிகர்த்தமட்டிகள்ப
முக்கமுற்றுவகை யிற்படிகுவனோ
பற்றலர்க்கெமனெனக்களத்திலடர்
பட்டவர்த்தனர்த லைக்குவைபலதோய்
பப்புகட்புவியிடத்ததட்சிகரர்
பட்டிரத்தநதி யிற்செலல்கொடிதோ
பட்டமிட்டவணிநெற்றிமத்தகய
பத்திபெற்றவரு னக்கினியவரோ

பட்டுடுத்துலவும்விப்பிரக்குலர்செ
பத்தினிற்பிரிய முற்றொருவினையோ
பட்டடைக்கிடைநிறைத்தபொற்றிரள்ப
டிற்றுணைச்சிலர்பெ றச்செயனலமோ
பற்பமிக்கணியுமெற்கொர்கற்கிணறு
பக்கணத்தரறி யத்தரல்பிறரோ
பட்டிமைக்குணமறத்தவிர்த்தெனது
பக்கலிற்றினம்வ ரத்தடையுளதோ, (௬)

சித்திரத்திடைவசித்தொர்மெய்ச்செயறெ
ரித்துமிப்படிவ ருத்தொருதலைவா
செக்கணைப்பொருவுகற்கலைக்குரிய
சித்தர்நித்தமும்வ ழுத்தொருபெரியோய்
செப்பறற்கொளுநதிக்கண்முற்பிறவி
செப்பிமெய்ப்படவ தட்டியகிழவா
சிக்குமுக்குறுமதப்பிணக்கரது
சிற்றிணக்கநழு வுற்றுயவருள்வாய்
தித்தெய்தித்திமியெனக்குதித்தசிவ
சிற்பரத்தையுணர் விற்பனர்தவமே
திக்கனைத்தையும்வயிற்றடக்கியதி
ருட்டுணைப்பவர்த மைப்பிரிவரியாய்
திப்பியத்தணிமருப்புறப்பலபல்
செக்கடிக்கணுமிவ சித்திடுமுதல்வா
செச்சைமிக்கலர்குறிச்சியிற்குறவர்
திட்டுசொற்கொடுமு வப்புறுசிறுவா, (௩௰)

சிற்றிடைக்கவுரிமுற்சொலுத்தமிகள்
செற்றமற்றவுரி மைக்குரியவனே
செட்சிறைக்கழுகுதுய்ப்பவற்றையிகழ்
சிட்டர்நட்டபரி திக்கிடையமர்வாய்
சித்திரைப்பலவெனச்சொலித்தளர்தி
யக்கமுற்றவர்த மைத்தழுவுகிலாய்
சிக்கமற்றருமைமக்களைக்குறைசெய்
திக்கருக்குமுண விட்டுளகொடியோய்

தெப்பமொத்தவிர்குருக்கொலைப்படல்சி
றப்பெனற்பர்தம்வி ருப்பமுமுடையாய்
திட்பமிக்கவயிரக்குணத்தொடுதி
கழ்ச்சியுற்றபன்ம தத்தினுநிறைவாய்
செய்த்தொழிக்கண்வளைமுத்தமிக்குமிழ்செ
ழிப்புடைப்பலத லத்தினும்வளர்வாய்
செட்டுமுற்றுகயமைக்குணக்கடையர்
தெக்குடைச்சமன்வ லைப்படவிடுவாய், (௯)

மெய்த்திருக்கயிலையொத்தபற்பலவி
தப்பதத்தையுயிர் கட்கருள்பொதுவா
விட்டுணுக்கலையினிச்சைமுற்றறவி
டுத்தவர்க்குநிரை யக்குழியிடுவாய்
வெற்பினுற்றவன்முகத்தசட்சமயம்
வெற்றெனப்பகர்சி றுக்கரைவிழையாய்
விட்புலத்தரிவையர்க்கலக்கமுயல்
விப்பிரப்பதர்ம திக்கருமுதலே
வித்தைமுற்றுறுமருட்கடற்றிவலை
வெட்டுகைத்தகுவ ருக்குநல்கியவா
வித்துவத்தலைவனத்தனத்திறகு
மெத்தெனக்குலவு றச்செயும்விபவா
வெப்பமக்கினியிடத்தமைத்தறன்மி
கக்குளிர்ச்சிமரு வச்செயும்விரகா
விச்கல்கக்கல்குளிர்சத்திபித்தசுரம்
வெட்டைமுற்பகர்பி ணித்திரள்களைவாய்,(௯௰)

வெட்கம்விட்டவமணர்க்கழுத்தலைவி
றைக்கவைத்தவனி யற்றொருடைமிலைவாய்
மித்தையைச்சினவுபுத்திரற்புளிவி
ருட்சமத்தியினு யச்செயும்விகிர்தா
வித்தெனச்சதுவகைப்பொருட்டொகைவி
தித்தவட்குநொடி யிற்கதிதருவாய்
விற்றுவர்ப்பொருமுகக்கிளிப்புலவன்
மெச்சுசொற்றிகழ்தி ருப்புகழணிவாய்

மிச்சமுத்தமிழிலக்கியக்கடல்வி
ளக்குநற்சிசுவ ளித்தவண்மையதே
மிற்கடுத்தவிடையுற்றபுத்திரியில்
விற்பனப்பனவ னுக்கமுதடுவாய்
விச்சுளிப்புலவர்சொற்படிக்கெணில்வி
யப்பியற்றும்விர தக்குணதரனே
வித்தமிக்கவரசர்செயித்துமகிழ்
வெற்றியிற்குலவு சற்குருபரனே. (எ)

தனன தனதனன தன தந்தந்தனத்தனன
தனன தனதனன தன தந்தந்தனத்தனன
தனன தனதனன தன தந்தந்தனத்தனன—தனதானு.

பரமமெனுமொருபொருளையின்றென்றுரைப்பவரு
முணவினெடுதுயில்வரவுகண்டின்புறப்பொருவில்
பனிருசமயருநடுநடுங்கும்பிழைப்பகுதி
யழியாதோ

பசுவுமரையயமுயலுடும்பும்பல்பட்சிகளு
மறனில்வளர்கயன்முதலவுந்தின்றுவக்குமவர்
பசியவிலைகனிவிதையருந்துஞ்சிறப்பினிடை
மருவாரோ

படிறுமொழியளவறமொழிந்தம்பொனிற்பெரிய
துணைசிறிதுமிலையெனநினைந்திங்குழைக்குமவர்
யஞ்சநட்டசீர்நடைதுன்றுசத்தியாகிய
னந்தவித்தையாடியோர் தெம்புணர்த்தினாயே
யங்குரித்தபேரருளின்குறிப்பதாகவெ
னங்கமொத்தொவோர்விசை வந்தொளித்துளாயே
யண்டலர்க்கொர்காலனெனுஞ்செயத்தின்மேவியு
கங்கரிப்பிலாதுனி டங்கலக்கவாள்வாய், (௭)

கொம்புடைப்பல்காலியசங்கொலற்குநாணமில்
குண்டனைக்கொல்வேல்புனை யுங்கரத்தர்வாரார
குண்டையொக்குமானிடர்தங்களைச்செவேளரி
கும்பனைப்பென்வாயினர் புன்சொலிச்சியானே
கொங்கைமுற்றிடாவிளமங்கையர்க்குளேசிலர்
கொண்டபத்திநாடியு மன்றளித்தநேசா
கும்பனுற்றமாதவர்தங்களுக்கொர்கோவுறழ்
கொன்பொறுத்ததேசிகர் சிந்தைவிட்டிடானே

குண்டணிச்சொன்னதன்முன்சொல்சுத்தயோகியர்
கும்பிடப்பல்பேறுத வும்புகழ்ச்சியோனே
கொன்றிறைச்சியார்பவர்தங்கணத்தின்மேல்வெருள்
குஞ்சரத்தைநேர்சில ரின்புறச்செய்வானே
குன்றினத்தின்வார்சிறைதுண்டுறச்செய்கூர்வளி
குன்றலற்றவாயுத னொஞ்சும்வெற்றியோனே
கொங்குபட்டபூமுழுதுந்தொடுத்தமாலைகொள்
குங்குமத்தைநேர்சர ணம்படைத்தநாதா,(௨௰)

குண்டுடைப்பயோததிமுன்கொடுத்தவாவிகு
றுஞ்சுவைத்தென்மேன்மைபெ றுஞ்சுபக்குணாலா
கும்பியிற்புகாமைநினைந்துழைத்துளாரிடு
குங்குலத்திலார்வம டைந்திடற்குநாணாய்
குஞ்சமொக்கும்வால்சுழலும்பசுக்களாவிகு
ளிர்ந்திடச்செய்வாரைவி ரும்புநட்பினனே
குண்டலத்தையேபெயரொன்றுரைத்தநாளொரு
கொண்டலொக்குமாதவன் வந்திடச்செய்தோனே
கொண்கனிட்டமேகுறியென்றிருக்குமாதர்கு
லம்பயிற்றுமாறுசெ யுங்குணத்தினனே
கொஞ்சுபத்தியோரையிகழ்ந்துடற்கொள்கால்வழி
கும்பகத்தினுளுமு யன்றவர்க்குமாவாய்
குஞ்சுமுட்டையூன்வளையுண்டுவக்குநீர்கொள்கு
ணுங்களைத்தொடார்சம யங்களைத்தளானே
குன்றியிட்டமாதர்கள்பந்தடித்துலாவுகு
றிஞ்சிமுற்குலாநில மைந்துடைப்பெமானே, (ஜ)

பம்புசத்தசாகரமுங்குடித்தமாமுனி
பண்டையிற்செய்தேயருள் செந்தமிழ்க்குமோகா
பன்றியற்றைநாளொருகொம்பினிற்கொள்பார்மிசை
பைந்தகைப்பராரைம ரங்கண்மிக்குளானே
பந்தயத்தினுலிகலுந்துடுக்கராமவர்
பண்பினைச்சதாமுனி யுஞ்சருத்தினனே
பங்குபட்டவாயமதங்களெட்டிடாதப
தந்தனிற்குலாவுசு தந்தரப்பிரானே

பம்பரத்தைநேர்முலைமங்கையர்க்குமால்கொள்ப
　　வன்கடுப்பவேகிரி　　　　ரந்துதுய்த்தவீசா
பம்பைகொட்டுமூரில்வளர்ந்துவெற்றிநாடிய
　　பஞ்சவர்க்கொர்தாயினை　　　　லஞ்செய்திட்டமாயா
பண்டிமுட்டவூணிடுகின்றவர்க்குவேணப
　　யன்கொடுக்குமானைமு　　　　கந்துலக்குவானே
பங்கயத்துவேதனமும்படிக்குமோதுப
　　யங்கரக்குகாவுயர்　　　　சுந்தரக்குமாரா, (௨௪)

பங்குவிற்கொர்தாதையெனுஞ்சொலுற்றுலாவுப
　　தங்கனைத்தொழார்தம　　　　தங்களைக்கொளானே
பஞ்சரத்தில்வாழ்கிளியென்றிசைக்கும்வாய்கொள்ப
　　ரம்பரைக்கவாவுறு　　　　தொண்டர்பெற்றபேறே
பங்கிமுற்றிலாதுநிதம்பறித்தசாரணர்
　　பஞ்சமற்றவாழ்வுற　　.　　வும்பரிக்குமேகா
பஞ்சிலற்பமானதரங்கொள்புத்தராதியர்
　　பந்திகட்குமானவ　　　　ரங்கொடுத்தசோரா
பஞ்சவற்கும்வாள்வளவன்றனக்குநீடுப
　　ணந்துணர்க்கொள்வானெடு　　　　பின்சிலர்க்குமார்வா
பஞ்சைகட்குநோய்தரும்வன்புகற்றகாவலர்
　　பந்தினர்க்குநாசநல்　　　　கும்பெருத்தகோபா
பண்டொலித்தவேதமனந்தமெச்சுநாயக
　　பந்தமற்றஞானநி　　　　லங்களுக்கொர்கோவே
பங்கமற்றவாசெயதுங்கதற்பராவுள
　　பண்டமுற்றுமோதிட　　　　மெங்குமுற்றதேவே. (௨௫)

தத்தத்தனதத்தத்தனதன தத்தத்தனதத்தத்தனதன
தத்தத்தனதத்தத்தனதன—தனதானா.

முற்றத்துறவுற்றுக்கையினுகர்
　　பிச்சைப்பதநத்தித்தவமுயன்
　　முத்தர்க்குரிமைப்பட்டவர்பணி　　　　புரியேனோ
மொக்குட்பொருகுத்துத்தனமிசை
　　கச்சுப்புனைபொற்புச்சிறுமியர்
　　முத்திக்கொடணைக்கைக்குருகுவ　　　　தொழியேனோ

மொக்கைக்கவியிற்பட்டலமரு
துக்கத்தையொழிக்கக்கருதலின்
மொய்ப்புட்பமருச்சித்துனதடி பணியேனோ
முத்தைப்பவளத்தைக்கருமணி
யைச்செப்புநிறச்சொற்றமிழினின்
முச்சட்டையெனப்பட்டநுதினை முயலேனோ
முக்குற்றமறுத்துப்பரகதி
யிற்புக்குறவிச்சித்தமணை
முட்டிப்பொரும்வெற்றிப்புலவனின் மிளிரேனோ
முட்கொத்துறழ்பெட்புக்கயவர்கள்
கைப்பொய்ப்பொருளிச்சித்தவர்மனை
முற்றத்துழலற்பப்புலவனை வெருளேனோ
முட்டைக்கருவைத்துய்த்திடுதலு
முற்றுத்திரிதுட்டத்திரளைமு
ருக்கிக்கருணைச்சித்தனைநனி புரவேனோ
முக்கிப்பெரிதிச்சிச்செனமயி
ரொக்கப்பலர்பற்றிப்பறிசெயு
மொட்டைத்தலையர்க்கற்பினரழ வொருவேனோ,(ஞு)

முச்சிற்புழுதிக்கைச்சிறுமிய
ரொத்துச்சிலருட்புக்கவிருமை
முற்செப்பியவொற்றைத்திருமொழி நிலவாதோ
முட்டற்றவுணர்க்கொத்தவர்செய்த
வத்திற்கும்வரத்தைத்தருமரன்
முச்சிப்புனலிக்கற்கிணறிடை யுதியாதோ
மொப்புத்தயிரிச்சித்திடையர்கள்
பட்டிக்கிடையுற்றுப்பழகுமு
மூச்சித்தனெழுத்துப்படிபொரு ளுதவாதோ
முத்திக்கடன்மத்திப்பிரணவ
வித்துட்புகுசத்திக்கணபதி
மொத்தத்திலுணாக்கப்படுமொழி பலியாதோ
மொச்சைப்பயறுத்துத்திகழ்பலி
னர்க்குத்தலைவற்குட்டியவன்மு
னைச்சத்தியொடுற்றுத்தருபொடி நிலையாதோ

மொட்டுக்கமலத்தைப்புரையும
னத்துச்சிலர்நத்தித்தொழலின்மு
தற்சொற்கதிர்சித்திற்பெரிதென்மெய் திகழாதோ

முக்கற்பெருவெற்புக்கருகுபு
தைக்கப்படுமெக்கற்பினனுண்மு
ரட்பக்குவமெய்ப்பட்டனையவர் தழையாரோ

மொய்த்துப்புவிகத்தத்துயர்செய்ப
தர்க்கொததவரைச்சத்தியபலர்
மொத்திப்பலதிக்கிற்சிதறல்செய் துயராரோ, (வ)

அற்றத்தருமைச்சொற்பொலிவுட
னிட்டுத்தவர்முற்பட்டவரைய
ளிக்கத்தகுநட்புற்றவர்மிடி யுறலாமோ

வத்தத்தைமதித்துத்தவசைவெ
றுத்துக்கலகத்திற்றினமுய
லற்பக்குணமிக்குற்றவர்களி பெறலாமோ

வத்தத்துறுமிக்குச்சிலைமத
னைச்சுற்றியமைக்கட்படையைய
டக்கத்தகுவெற்றிக்குரியரு மழலாமோ

வக்கத்தொடுகெட்டைத்துளசிவ
டத்தைப்பணிகட்குட்பெரிதெனு
மற்புற்றவரைப்பத்தியில்சிலர் நகலாமோ

வக்கத்துணையற்றுற்றவன்மனை
பெற்றிட்டசதப்புத்திரர்நிக
ரற்குத்துளதுட்டர்க்கெமபுர மமையாதோ

வப்பத்தெருவைப்பிட்டுடனமு
மக்கட்குதவிப்பெற்றவளுட
லைச்சுட்டவனுக்கத்துறவிகள் பெருகாரோ

வட்டத்திசைமுட்டச்செயமுறு
கொற்றப்படைகைப்பற்றினர்களு
மச்சப்படுமற்சொற்புலவர்கள் குழுவாரோ

வச்சித்திரண்மெச்சப்படுமிறை
பக்கத்திலிரக்கிற்பெறுமிழி
வற்றுப்புகழ்சத்தக்கடலென வளராதோ,(வஹு)

வப்பித்தொடர்துட்டப்பழவினை
யொற்றைச்சடம்விட்டொற்றையினிடை
யட்டைக்குவமைப்பட்டுறல்செய லழியாதோ
வத்திக்கலைகட்டிப்பலமலை
முற்செப்புயிர்கட்பெற்றவளைய
ரிக்கொப்பவிரட்சித்திடும்விழை வினஞோ
வச்சுப்பல்விதத்திற்கொடுமன
துட்புக்குவினைத்தறகரியன
வற்றைத்தினமெத்தப்பகர்தலு மவமேயோ
வக்குக்குவைகக்கிக்குடவளை
மிக்குற்றவளக்கர்க்கரையில
ருட்பெற்றிவிளக்கித்தரல்பிழை யெனலாமோ
வற்பட்டகளத்துக்கனல்வரை
யிற்செப்பியமெய்ச்சொற்படிசெய
வட்டிப்படனிற்குத்தகுதிகொ லறியாயோ
வப்புக்கிடைவெப்புக்கனலிடை
விட்டிட்டகவிப்புத்தகமுழு
தட்டித்தருதற்கொப்பியதுக படமேயோ
வத்தத்தருணத்திற்பலபல
பத்தர்க்கருள்சுத்தப்புகழைய
ழிக்கத்துணிதற்கொத்தெனையிவண் விடலாமோ
வத்தித்தொடைபச்சைத்துளவுக
டப்பப்பிணையற்கொத்துளனவ
னைத்திற்குமுரித்துற்றவனிலெ னெதிர்வாராய், (௨)

பற்றற்றவர்சித்தத்தினின்மறை
யுச்சிக்கணடித்துத்திகழிரு
பற்பச்சரணத்துக்குருபர னெனவாழ்வாய்
பத்திக்கடலுட்புக்கமிழுந
லத்தைக்கைவிடுத்துச்சினமொடு
பக்கைக்கணிடித்துக்கொளுமவ ரறியானே
பைக்கட்செவிசுற்றிப்பெருமலை
மத்தைக்கடலிட்டற்றையிலிரு
பட்சத்தர்மதிக்கிற்பெருகமு தனையானே

பத்துக்கவிசெப்பிச்சிலர்சில
ரொற்றைக்கவிசொற்றுக்கருதுப
வற்றைப்பெறவிட்டுப்புகழ்பல பெறுவோனே
பச்சைப்பரிகட்டித்திகழிர
தத்திற்றினமுற்றுற்றருவனி
பத்தைக்கறுவிச்சுற்றியபரி தியினுனே
பப்புப்பொலிசுத்தக்கடலினி
டத்திற்றிருவுக்குத்துணைவரு
பக்கத்தவளச்சக்கரமுழு மதியோனே
பத்தத்தொடடுத்துப்பணிசெய்க
சற்சுட்டபொடிக்கட்பருகிவி
பத்தட்டுயிர்கற்பித்தவன்முத லுடுவோனே
பட்டுக்கெடுமுற்புற்புதல்வனை
யப்புத்துளியிட்டுப்பசுமைசெய்
பட்சித்திரளொத்துப்படர்பல முகிலோனே, (௨௰)

பட்டுத்துணிசுற்றிக்கொளுமவர்
வெட்கப்புலியிற்சிற்றுரிவைப
னைக்கைக்கருவெற்பிற்கொளுமதள் புனைவோனே
பைக்குட்பல்சரக்குக்கொடுமது
னைக்குட்செலுநட்பைப்பெரிதுப
ழிச்சிற்கலியற்றுச்சுகமுற நினைவோனே
பற்பத்தின்முழுக்குற்றவிரொரு
செக்கர்ப்பொருபொற்புற்றணிமதிள்
பற்கக்குநெருப்பிற்பொடிபட முனிவோனே
பட்டிக்குலமொத்துச்சுருதிகள்
சுற்றத்தண்வனத்திற்சிலையடி
பட்டுக்கணையிட்டிட்டதுசொலின் மகிழ்வோனே
பட்டப்பெயர்பெற்றிட்டவனது
சொற்கொத்திருளிற்பொய்ச்சசிதரு
பட்டித்தொழிலுக்குத்திருவுள மிசைதேவே
பட்டைப்புனல்குற்றத்தசையிடு
துட்டப்பயல்கட்குக்கொடியப
யத்தைத்தருசெற்றத்திரிபுனை வடிவாவாய்

பத்தித்தவளப்பற்சிறுகுயி
லொத்துக்கனவுற்றுப்பழுதில்ப
ணிக்கட்கடையிற்பட்டொழுகரு டருவாளே
பற்றைச்செமலர்க்கைச்சதுரமி
ரட்டைப்படிநெற்றொட்டறவகை
பற்பற்பலுயிர்க்குச்செயுமிசை யுறுதாயே, (௯)

வற்றக்கடலைத்துய்த்திடுமுனி
செற்றத்திடைபட்டுச்சுழலொரு
மத்தக்கரியைத்தொட்டருளிய நெடுமாலே
மைக்கொத்தமனத்துக்கனகனை
யட்டுக்குடைப்பொற்கிரிநிகர்
மற்பெற்றபுயத்திற்புனையவொ ரரியானாய்
மச்சத்துருவுற்றுக்கடலிடை
புக்கத்தகுவற்செற்றவவெழில்
வட்டத்திகிரிக்கைக்கருமலை நிகர்வானே
மட்டுக்கமலத்துப்பிரமனு
திக்கைக்கிடமிட்டுத்திகழும்வ
யிற்றிற்புவியொக்கப்பருகிமு னுமிழ்வானே
வர்க்கக்கனியப்பக்குவியல்கொ
ழுக்கட்டைபயற்றுக்குவைமுதல்
வைத்துத்தொழுநட்பர்க்குவகைசெய் களிறானாய்
மற்றொப்பில்வனப்புக்கொளுமுலை
வெற்பைக்கொடுமுட்டிப்பொரும்வல
வைச்சத்தியணைத்துப்பெருநட மிடுதாளா
வற்சத்துதிரத்தைப்பருகவு
மொத்துக்கொள்பவர்க்குச்சமணிகர்
மக்கட்குறுதத்தைக்களைதரு பெரியோனே
மட்கிக்கலியிற்சிக்குறுதுய
ரற்றுப்புகழ்பெற்றுப்பொருவில்வ
ரத்தைக்கொளிரட்டைப்புலவர்க ளறிசீலா, (௰)

மற்பொற்புறும்வெற்புத்தொறுநட
மிட்டுச்சிகியிற்சத்தியொடுவ
சித்துப்புவனத்தைக்கணமதில் வளைவோனே

வட்டொத்தமுலேச்சொற்கிளியென
நெட்டைப்பரனுற்றுக்களிகொண்ம
றத்திக்கருமைச்சொற்பலசொலி யணேவோனே

வர்த்திக்குமிசைக்கட்பழகுமு
னிக்குத்துயர்மிக்குற்றிடவொர்ம
கத்திற்கனல்வெற்பொத்தெழுதக ரிவர்வோனே

மட்டித்தனமுற்றுத்தளருமெ
னச்சுட்கனவிற்புக்கருணேம
லேதத்தைதயெனச்செப்பியசிவ குருநாதா

வத்துத்திறமொற்றைப்படுவதெ
னத்தக்கதவத்தர்க்கெதிரிகல்
வற்புற்றமதக்கட்டினருணர் வரியானே

வட்டிப்பொருளிச்சித்தளவில்பி
ழைச்சொற்கள்படித்துத்திரியும
ருட்பட்டமனத்தர்க்குளும்வளர் கொடியோனே

வத்திப்புகையுச்சிச்சுடரத
னிற்குப்பெனவுற்றுத்திகழும்வ
ழக்கொத்தருள்பெற்றிட்டவர்வடி வழுமாவாய்

வைப்புத்தியளித்துத்தவசைவ
ளர்த்துச்செயசித்திற்கொழுவிம
யக்கற்றகதிக்குட்புகவிடு மிறவானே. (உசு)

தனனதனதந்ததத்த தனனதனதந்ததத்த
தனனதனதந்ததத்த—தய்யன.

இறையளவுமன்பில்சித்தமுடையவெனுள்வந்துநட்பொ
டெனதடிமையென்றுரைத்த கள்வனு

ரினியவுணவும்பசப்புமகளிர்சுகமுங்கசப்ப
வியலிசைநடந்தெரித்த செல்வனு

ரிடிநடுநடுங்குசொற்சொலவுணர்முதல்வண்டருக்கொ
ரிகலெனவிளங்குபெற்றி நல்கலா

நெறிகடல்கடைந்தெடுத்தவமுதநுகரின்பமுற்ற
விமையவர்களுந்துதித்த வள்ளலா

ரிகபரமிரண்டும்விட்டுநடுநிலேயினின்றபத்தி
யெதினுமுயர்வென்றுணர்த்த வல்லனு

ரெவரெவர்களெங்கியற்றுபணிகளுமுவந்தவர்க்கு
ளிசையுமவணஞ்சிறக்கும் வெள்ளாறு
ரிவனிவளிதென்றரற்றுசமயமுழுதுந்தரித்து
மெவையினுமிணங்கலற்ற பொல்லறு
ரெளிதருள்குணம்படைத்துமுதலுநடுவுங்கணிக்கு
மிறுதியுமறும்பதத்தி லொல்வதார், (௯)

இனியுலகறிந்துரைக்குமதிசயமனந்தநத்து
மியல்பினரறிந்திடச்சொல் சொல்லனே
விரலைமுயலென்றுபற்பல்புலவர்சொல்களங்கமுற்ற
வெழின்மதியையுண்டுகக்கு மெல்கொலோ
விடபமிசையந்தரத்திலுமையவளுடன்றவத்த
ரெதிர்வரம்வழங்கிற்கு நல்லனே
வெழிலிவருகுன்றமுற்றும்வழிபடுநலம்பொறுத்த
விமயமலையன்றுபெற்ற தையலோ
வெழுபுவியுமுண்டுகக்கியளவிலுயிரும்புரக்கு
மிசைபெறுநெடுஞ்சடத்து மையனே
விருபுழையியைந்தொர்வெற்பில்வருகதைவரைந்தமைக்கு
மெறுழொடுவிளங்குமொப்பில் கையனே
விலையசைதருந்திருக்கையயிலொடுசிகண்டியுற்றெ
னிதயநடுவுங்குதிக்கு மெய்யனே
விளமகர்தமிஞ்சைமிக்கபசுவதையுடன்செய்துட்ட
ரினமுநமதென்றுநித்தம் விள்வதோ, (௰)

அறைதருமதங்களுக்குளுயிர்வதையெனும்பிறைச்சி
யயில்கையிலமிஞ்சிநிற்க நள்ளினே
னணுவளவுநெஞ்சிரக்கமிலர்கொடியவஞ்சகத்த
ரனைவர்களையும்பெருக்க வெள்ளினே
னருமறைவிளம்புபற்பலகடவுளரினுஞ்சிறக்கு
மறுவனாயுநெஞ்சகத்தி லுள்ளினே
னறிவதுமயங்கலுற்றகனவினில்விளைந்தசித்தி
யநுபவநினைந்துமிக்கு துள்ளினே
னசடனாமனங்கலக்குமுறவரெனநம்பிநித்த
மவர்தருமிடும்பைதுய்த்து நைகினே

னசலமெனநின்றுசித்தசலனமறலின்றிமுற்று
மவலமதிகொண்டுபத்தி செய்கிறே
னகளவிநயஞ்சொலித்தசமரசருணம்பொறுக்கு
மதுலர்மனமுங்கொதிக்க வைகிறே
னடமருவுசண்டிகட்குமெதிர்மொழிவிளம்பல்விட்டு
ளவசமொடுநொந்துமெத்த நொய்கிறேன், (வறு)

அதுவிதெனும்வம்புபட்டசமயமுழுதுந்தவிக்க
வமர்நனிபுரிந்துமவெற்றி யெய்துவே
னழலினுடனம்பிவிட்டபனுவல்பலவுங்கிடைப்ப
வகிலமொழியும்புகழ்ச்சி கொள்ளுவே
னடன்மலிநமன்றனக்கொரொமனெனவிருந்தசித்த
ரமர்பதிதொறுஞ்செலற்கு மொல்கிடே
னருணகிரியின்கணுற்றகிளியெனவலிந்துரைத்த
வயிலவனரும்பதத்தி லொல்லுவே
னகடவிகடம்படித்தமகளிர்பினடந்துசொட்டு
மதரமதுரங்குடித்து வெள்கிடா
தலைகைநிகர்செம்பொனிச்சைமலியரசகெந்திசுட்டு
மதலவனையுந்துளைத்து ஞொள்குரு
தலையுடைமடந்தைதுக்கமுறமுறைமறந்துவக்கு
மரசர்களொடுஞ்சிரித்து வைகிடா
தவமதிதொலைந்துலப்பில்வெருமதியமைந்துசுத்த
வருள்வலியுறும்படிக்கு வெளவுவாய், (௭)

நிறையுமுணர்வின்றியற்பர்மனைதொறுநுழைந்திரக்கு
நிதிமயல்கொணெஞ்சகத்து முள்ளவா
நிகமமுதலென்றுசெப்புமளவில்கலையுந்தவிக்க
நிசமொடுகலந்துநிற்கு மையனே
நிணமிகவருந்திடப்பல்வதைபுரிகுணுங்கருக்கு
நிரையமெனவுங்கொதிக்கும் வெய்யனே
நிரைபடுகணங்கண்முற்றும்வழிபடலறிந்துநித்த
நினைதருபயன்கொடுக்கு மொய்யனே
நிகிலசெயதுங்கமிக்கபுலமைமுடிகண்டுவக்கு
நிபுணர்பலருந்துதிக்கு மல்லுளாய்

நெறுநெறெனவண்டமுற்றுநடுநடுநடுங்கியெய்க்க
நெடிதறல்பொழிந்தொலித்த செல்லுளாய்
நெளிநெளிநெளிந்தசற்பமுழுமையும்வணங்கொருத்த
னிதமொழியினும்பெருத்த சொல்லுளாய்
நிரதிசயரஞ்சிதத்தணமுதரசபுஞ்சமுத்த
நிமலகதியின்கணித்தல் புல்லுவாய்,(௨௰)

நிறையறவுயர்ந்தெறிக்குமணிகொண்மகுடந்தரித்த
நிருபர்பயமொன்றுறச்செய் செய்கையாய்
நிகராறுநலஞ்செய்சுத்தவமுதகிரணங்கவிழ்க்கு
நிலவுமதிகண்டுவெட்கும் வில்லுளாய்
நிலமுழுமையுந்தொனித்தகடன்முழுமையும்பொருப்பி
னிலைமுழுமையும்படைத்த கையனே
நெடிநனிதருஞ்சிவத்தமிளகுறழ்பொசுங்கர்கட்கு
நிதமுணவிடும்பழிப்பு மல்குவாய்
நெறிபடமுனம்படைத்தபொருள்கள்பலவுங்கணத்தி
னிமிடமுனியுஞ்செயத்தொர் துய்யனே
நிபமறிபெருந்தவத்துமுனிவராதுசிந்தைகட்கு
நிபிடமறைவொன்றமைக்கும் வைபவா
நிகளநிகர்பந்தமுற்றவுயிர்செய்தவமிஞ்சவிட்டு
நியதிகளையுங்குணத்து வல்லவா
நிறுவலின்முதிர்ந்தெறிக்கும்வெயில்பொருமலங்கழற்றி
நிழல்பொருபதங்கொடுக்க வெஃகுவாய், (௩)

சிறையினையறைந்தரற்றுபறவையெழுதுங்கொடிக்கை
திகழ்தரநடஞ்செய்பற்பல் சையனே
சினவரவினந்துடிக்கவகவிநடனஞ்செயொப்பில்
சிகிமிசையிவர்ந்தணைக்கு மெஃகனே
சிவசிவவெனுஞ்சொல்செப்புமவரடிபணிந்தபத்தர்
திரிபுடியுறழ்ந்தபச்சை வில்வனே
செகமுழுதுமஞ்சும்வெற்றியுடையநமனங்கமட்ட
திருவடிகொள்குன்றமொத்த மெய்யனே
திரைகடல்வறந்துகொற்றவருணனுநடுங்குறச்செய்
செயமுறவளைந்தவொற்றை வில்லனே

திசைமுழுதுமஞ்சுறப்பல்கொடுமைபுரிகின்றதுட்டர்
திறமழியவென்றுசிற்சில் பொய்சொல்வாய்
தினுமவைவழங்குநட்பரிகலறமுனிந்துசித்தர்
திரளிடைவிடுஞ்சிவத்த தெள்ளியே
சிரசிலிடுகின்றகுட்டொடிருசெவிமறிந்துபற்றோர்
செயல்புரியுமன்பரிட்ட மங்குருய், (ஜஹு)

சிதன்முதல்விளம்புடுக்கண்மதியரதனங்கண்மட்டில்
செறிவிழிகளுந்துலக்கும் வெய்யிலோய்
செழுமணியொடம்பொனுற்றகடையர்மனமென்றி
ருட்டுதிமிரமுழுதும்பறத்து பல்கரா
சிகரமொரிரண்டையொத்தமுலையினொடுசிங்கமுற்ற
திரிபுரையெனும்பெயர்க்கொள் வல்லியே
சிகலறுசெல்வம்பொறுத்தகடன்மகளும்வெண்பொனிட்ட
சிதமகளுமென்றிரட்டு தள்ளையே
செடிமுழுதொழிந்துமிக்கமணமுறுமடந்தைபெற்ற
சிறுவன்வனையும்பல்சொற்கள் புல்லினாய்
சிரகமுறுசெங்கரத்தொடொருமதில்கடந்தவித்தை
தெரியுமுனிவன்படித்த கல்வியே
திருடுபடும்வன்குணத்தர்கருதும்வடிவுங்கொள்சித்த
சிரமகுடிலங்கெடுக்கும் வெள்ளமே
செவிடுகுருடென்றுதிட்டுமவரையும்விரும்புகத்த
சிறிதுமொழிவின்றியுற்ற தெய்வமே. (௨௭)

தய்யத்தனனதத்தந் தனத்தந்தானன
தய்யத்தனனதத்தந் தனத்தந்தானன
தய்யத்தனனதத்தந் தனத்தந்தானன—தய்யானு.

தெய்வத்திருவருட்சம்பவத்தெம்பாலென
துள்ளப்படிநடத்தும்பெருக்கந்தோய்தரு
செல்வப்பொலிவினைத்தென்றிருச்செந்தூரினல்
கில்லாயே

தெய்தித்திரிகிடத்திங்கணத்தொந்தோமென
வெள்ளைப்பொடிமுழுக்கன்குதிக்குஞ்சீர்திகழ்
தில்லைப்பதியினிற்செந்தமிழ்க்கொண்டோதிய
சொல்லினோ

செல்விற்கயல்குதிக்கும்புனற்கொண்டோவிடு
மல்வித்தடம்விளக்கும்பதிக்கண்பாடல்கள்
செய்யச்சொலியெனக்கன்றளிக்குஞ்சீரிதழ்
பொய்தானோ

தெள்ளித்திருவுருக்கொண்டுமைப்பெண்பாவையொர்
வெள்ளிக்கிரியடுத்தன்றளிக்கும்பீடுறு
செல்லக்கணபதிக்குஞ்சரத்தன்பார்சொலு
நில்லாதோ

செவ்விக்கிளியொழிக்குஞ்சிகிக்கண்கூரிய
வெஃகப்படையொடுற்றண்டருக்கன்றீடருள்
செய்கைக்குகனெனக்கண்டுரைக்கும்பான்மைகண்
மெய்தானோ

தில்விற்பலபிணக்குங்குணக்குந்தோய்தரு
மையொத்திரவினிற்சஞ்சரிக்குந்தானவர்
செல்லற்படவுறுக்குங்கறுப்பன்போல்புக
ழெய்தாதோ

தெள்ளித்தெளியுநுட்பஞ்சொலிக்கின்றோர்புக
ழெல்லைத்தொழுதுநித்தங்குறைப்புண்பாடுகள்
செல்லப்பெரிதிரக்கின்றதற்கென்றோர்பய
னில்லையோ

தெவ்வுத்திரள்வதைக்குங்கறைச்செஞ்சூலமொர்
கையிற்குலவிடத்திண்டிறற்சிங்கேறிவர்
சில்லுற்றவளுருக்கங்கொடுத்தன்றோதிய
தொல்லாதோ,(ஹூ)

செல்லுக்கிடர்விளைக்கின்றவர்க்குந்தேர்வரு
மெய்ம்மைப்பிரணவத்தின்பொருத்தங்கோவுறு
சில்லத்துவிதையொத்தென்கலக்கந்தீர்தரல்
செய்யாதோ

செள்ளுக்குலம்வளர்க்குஞ்சிறைக்கங்காதிய
புள்ளிற்றசைமிகத்தின்றுவக்குந்தீவினை
சில்லர்க்குமறநித்தங்குறிக்கும்பேரருள்
பொல்லாதோ

சிவ்வுச்சிவெனவக்கஞ்சிவக்குங்கோபிகள்
வையிற்றலைகுனித்துந்துதிக்கும்பாவலர்
தெய்யச்சொலுமொலிக்குங்கவிக்கென்பாவகை
கள்கீழோ

செய்சொற்கவிதொடுத்துன்கழற்கன்பாவிட
வில்பற்பலருமுத்தம்பெறக்கண்டேனைய
சில்பத்தரைவருத்துந்தொழிற்கொண்டாயிது
நல்லாறே

செவ்வைக்கருணைமுற்றுந்தவிர்த்தஞ்சாதெணின்
மையைக்கிரியைவெட்டுங்கோலைப்புன்பூசைசெய்
செய்யற்குழியையொக்குந்தகைச்சண்டாளரை
யெள்ளாயோ

சில்வித்தொனிதழைக்கும்பொழிற்குன்றேமுத
னெய்தற்புவிவைக்குங்கிளத்தைம்பாரினர்
தில்பற்பலவகுத்தங்கியற்றுஞ்சாறுன
தல்லேயோ

செய்யுட்டொனிவளப்பங்களைக்கண்டேகொடை
நல்கற்கிசையுநட்பொன்றினர்க்கும்பூவளர்
செய்யட்குமுறவற்றம்புவிப்பெண்டாழ்வுற
லஃகாதோ

தெள்ளற்றவிடொர்க்குத்துங்கொடுக்குஞ்சீலமில்
கல்லற்கயவர்கைப்பொன்பறித்தன்பேவிளை
செய்யொப்பவர்மிடிப்புண்கெடுக்குக்கோன்வர
வுள்ளாயோ, (௰)

சைவத்தலைமைபற்றுஞ்சிலர்க்கென்பூடொரு
கொவ்வைக்கனியிதழ்ப்பெண்கொடுக்கும்பாடல்செய்
தர்மத்தினைமுதற்கொண்டுரைக்குஞ்சீர்கள்செய்
துள்ளாயே

சையத்திறைதவத்தன்றுதித்தஞ்சானன
வையற்கிடம்வசித்தண்டமுற்றும்பேணிய
தள்ளைக்குரிமைவைக்குந்தவர்க்கின்பாவன
பெய்தாயே

சல்விக்குணமுடைக்குண்டரைக்கொன்றேபுவி
யுய்யச்செயுநிமித்தம்பிறக்குங்கார்முகில்
சையற்கருதிநிற்கின்றவர்க்குந்தீவினை
கொய்தாயே

சர்வத்திரருநத்துங்கதிர்ச்செங்கேழொளி
மையத்துணருருக்கொண்டடுத்தங்கோர்சிறு
தையற்குமனுமற்குங்குறிக்கும்பேறருள்
செய்தாயே

சல்லக்கயிறொடிக்கும்பிறைக்கொம்பாதிய
கொள்ளத்தியின்வணக்கம்பொறுக்கின்றாரது
சையத்தனையுமட்டின்புறக்கண்டாடுதல்
கையாயே

தல்லிப்படைதரிக்குங்கரச்செஞ்சேயரு
ளெய்தப்பாரதவிக்குந்திருத்தொண்டாரது
சள்ளைக்கலியொழிக்குங்குணப்பொங்காழியு
றழ்வாயே

சள்ளிட்டொருமுமக்கன்குலத்துந்தாழ்வுறு
பொய்மைச்சமயமுற்றுந்தனக்கென்றேறிய
தௌவைக்கதைகளுக்கும்பொருத்தம்போலகி
கழ்வாயே

சைகைக்கடைவிழிப்பெண்களைப்பொன்பூமியில்
வைகிப்புணர்வதற்கென்றுபுற்றின்றேவளர்
சவ்வுத்திரள்கள்சுட்டுண்பவர்க்குஞ்சீர்தர
வொல்காயே,(வரு)

தள்ளிக்கதவடைக்கின்றவர்க்கும்பாடல்செய்
தொய்மைப்புலவர்மொய்க்குஞ்சபைக்கும்போயுயர்
தய்யத்தொனிவிளைக்கும்பதத்தின்சாரமும்
விள்ளாதே

சள்ளற்கடிதடத்துந்தவப்பண்பினமென்
மையற்கடனடுச்சென்றுழைக்குந்தீவினை
தைவெட்கமுமலுப்புஞ்சழக்குந்தோய்தலி
னையாதே

தையிற்கதிபன்முற்கண்டுரைக்குங்கோள்சில
வெய்துற்றிடவெதுப்புங்கடுப்புந்தீயவர்
சள்ளுக்கிரைகொடுக்குந்தவிப்புஞ்சூழ்தர
வெய்யாதே

தவ்விப்பலரிடத்தும்பொருட்கொண்டீரமி
லெள்ளற்றமரவர்க்கும்பகுத்துண்டேசிறு
தல்லத்தினைநிகர்க்குங்களிப்பொன்றாநனி
துள்ளாதே

தல்லைப்படைநடுச்செங்கழைத்திண்டோளுட
னல்லுக்கிரமதக்குஞ்சரக்குன்றேறிய
சவ்விக்கிரகசித்தன்றொடுத்தைஞ்சாயக
மெய்யாதே

தைலத்தொடுமணக்கும்பொடிச்சிந்தேர்மலர்
மல்கிப்புவிபடைக்குந்திறத்தெண்டோள்விதி
தையற்சிலவமைக்கும்புழைப்புன்றேனுட
னல்காதே

சைலத்துறழும்வெட்டுந்துணைக்கொம்பேறநில்
வெல்பெட்புறுகுவட்டொண்டிறற்றண்டோடெதிர்
சைகற்பொருமொருத்தன்செலுத்துந்தூதர்கள்
கொல்லாதே

தைதத்துணைபொருத்துங்குறிக்கொண்டோர்பொது
வெல்லைக்கிடைநிலைத்துங்கொலைக்கஞ்சிடுறு
சைநப்பகையும்விட்டின்புறக்கண்டாயொரு
கைதாராய், (௭)

மெய்வர்த்தனைசெயற்கென்றுழைக்குஞ்சீரியர்
தொய்யிற்கழையையொக்கும்புயப்பெண்சேர்சுகம்
வெஃகுற்றிடினுமொத்தநகதற்கொன்றுறுகள்
செய்தேவே

வெல்லத்தினுமினிக்குங்கவிச்செந்தேன்மழை
பெய்திட்டுலகளிக்கும்புகழ்க்கன்பாமவர்
விள்ளத்தகுசொன்முற்றும்பரிக்குந்தாண்மலர்
கொள்கோவே

வெவ்வுட்டினமனத்துண்டரிக்கஞ்சோர்வரு
கள்ளத்தகுவர்சுற்றங்கெடத்திண்டோண்மிசை
வில்வச்சிரமெடுக்கும்பலர்க்கண்டாதுய
ரொய்யாரா

மெய்யிற்சிலுசிலுப்பொன்றிடச்சந்தோடமொ
டுள்ளித்தொழுதிரக்கின்றவர்க்கண்டாவிகழ்
வெய்யர்க்கெமனெனச்சென்றுறுக்குந்தீரர்த
முள்வாழ்வே

வெள்ளிக்கிரியினுச்சந்தனிற்கங்காநதி
துள்ளப்பிறைவிளக்கஞ்சொலிக்குஞ்சீர்தரு
வில்வச்சடைநிருத்தன்கருத்தின்பாலமர்
தெய்வீகா

வெய்துற்றுயிர்களைக்கொன்றுவக்குங்காலனோர்
பிள்ளைக்கெதிருறுக்குங்கணத்தங்கேவிழ
வெல்லத்தகுபதத்தன்புயர்த்தும்பேர்களை
வௌவேகா

வில்லைப்பொருநுதற்கொம்பினுக்கன்றாடைவ
னல்கப்படுபழத்தொன்றினைத்தின்றேயவள்
வெள்கிக்கையைநெரிக்குங்கணத்தொன்றோடரு
ளுல்லாசா

விர்விர்த்தொனிபிறக்கும்படிக்கம்பாயிர
மெய்திட்டவைவிடுக்குஞ்சிலைக்கொம்பான்மலி
வெள்ளத்தலையின்மொத்துங்கரத்தன்பீடுற
நல்கேவா, ௨௫

வெள்ளைக்கடனடுப்பண்கிடக்கும்பாய்மிசை
தையற்றுணைபிடிக்கும்பதத்தண்காவொன
மெல்லத்துயிலொருத்தன்றிருட்டின்கூர்மையை
நள்ளார்வா

மிர்துத்தளிர்பல்புட்பங்களைத்தன்றாளினி
லொல்லச்சொரியுநட்பன்கவிக்கும்பேரலை
மெல்லித்தலையினிற்கண்டுயக்கண்டாய்பெரு
மல்வாகா

வில்லற்கருதியெய்க்கும்படிக்கென்பாலொரு
பொய்சொற்றிதமெழுத்துங்கொடுத்தந்தாதிக
வில்கைக்கிடம்வருத்துங்குணக்குன்றேயளை
கள்வோனே

வில்லைப்படையினைக்கொண்டருக்கன்கார்பட
வெல்லிற்புரிதலைச்சந்ததத்துங்கூறியொர்
வெள்ளிற்செயவினைக்கின்றவர்க்கஞ்சாமைப
கர்வானே

விய்யைப்புணர்மலத்தன்றனக்கன்றோதிய
சொல்லைப்பொதியைவெற்பின்றவச்சிந்தானத
மிழ்செப்பியமுனிக்குந்தெரிக்குந்தேசிக
னுள்ளோவாய்

விள்ளக்கமழ்கடப்பந்தொடைக்கந்தாவலர்
கைதைச்சுரிகைபற்றுங்கரத்தன்றாழவ
விர்சொற்புனைமிடுக்குஞ்சமர்த்துந்தோய்தரு
செவ்வேளே

வில்லத்தொகுதிமுற்றும்புரக்கின்றாய்பெரு
மல்லற்புவனிசுற்றுஞ்சிகிச்செஞ்சேவக
வெள்ளக்குறள்களைக்கொண்டிகற்றிண்சூர்கிளை
கொல்வோனே

வெள்ளிக்குருவிகற்பஞ்சொலக்கொண்டோர்பலர்
கையப்பொருதழிக்குங்குணத்தெந்தாய்பொயில்
வெள்ளற்கெளியமுற்றுங்கதிர்ச்செஞ்சோதிகொள்
கைவேலா, (௯)

மைவத்திரம்வருத்துந்தகப்பன்பேர்சிலர்
சொல்லிற்றுயர்பெருத்தஞ்சிலைக்கண்போல்வளர்
வல்லிக்கொடிமனக்கஞ்சமுற்றெஞ்சாதெழு
மொள்வாரா

வையக்கொடிமலர்த்தண்பொருட்டின்பாவையர்
வெள்ளைச்சசியடற்குஞ்சரத்தன்பார்பிடி
வள்ளிக்குயின்முதற்பெண்களைக்கொண்டாடிய
சல்லாபா

வல்லொப்பெனவிசைக்குந்தனத்தின்பால்சிறி
துள்ளிற்கொளுமவர்க்கிந்திரர்க்குந்தேடரும்
வள்ளுற்றிடவளிக்குந்துணர்க்கொம்பேமலி
கள்ளாறே

வள்வட்டொணிகுறைக்கின்றவற்றின்றியுண
வள்ளிக்களுமரக்குங்குடித்துண்பார்களை
வைமுத்தலையிற்கொண்டுகுத்துந்தோளணி
கொள்வானே

மைதுய்த்திடுபுனற்றண்கடற்பைந்தானைகொள்
செவ்விப்புவிவிளக்கஞ்செயற்கென்றேயதி
வல்லைப்பொழுதினிற்சஞ்சரிக்குஞ்சூரியர்
புல்சோதீ

வள்ளைக்கொடியும்வெட்குஞ்செவிப்பெண்கோகில
நல்கற்றலைமகற்றந்திடற்கென்றேதொழ
மல்லற்றறைமுகக்குந்தலத்தன்போடெளி
செல்வோனே

வர்மத்தகுவர்குப்பங்கசக்குந்தோளுறு
கொர்வத்தருமனுக்கன்றெழுத்துஞ்சேர்சொலும்
வைகெப்பொருளுமற்றுங்கவிப்பண்பியாவையும்
விள்வோனே

வள்ளக்கமலபுட்பம்புளிக்கொம்பாரிலை
யொவ்வத்திகழ்பவற்றுங்களிப்புண்டாகிட
வைகற்பொழுதினித்தங்கிழக்கின்பாலெழும்
வெய்யோனே, (௰)

மையச்சமரசப்பண்பளிக்குந்தாரக
மைதிப்படிசொலிச்சிந்தையிற்கொண்டோர்குலம்
வௌவற்குரம்விளைக்குங்களிற்றின்போதம
மைவோனே

வள்ளற்பிரபலர்க்குங்குடிக்குங்கூழ்விடு
நொய்மைக்குடிகளுக்கும்பனைத்துண்டாகிய
வைகட்குமதுரசசெங்கவித்தண்டேன்விட
வைதாகா

வைதிட்டவனொருந்தன்றனக்கங்கேயவ
னையற்கெதிர்பணப்பொன்கொடுக்குஞ்சீர்சொல்வண்
மைதுற்றிடுமெனக்குங்குறிப்பொன்றேதிய
செவ்வாயா

மைமற்பொழுதையொக்குங்குறப்பெண்காதலி
னைவுற்றவனுவக்கும்படிக்கங்கேகிய
வள்கைத்துணையணைக்குஞ்சிறப்புங்காணுமொர்
கைமாவே

வைவைச்சுதனுமற்றுங்கெடுக்குந்தேவர்கள்
புல்பற்பலருநற்பண்பிசைக்குந்தேவரு
மல்கெப்பதியினிற்றங்குயிர்க்குந்தாயைநி
கர்வோனே

மல்லிட்டிகலறுக்குந்தலைச்செங்கோலினர்
நெய்யிற்பிசறுதுய்ப்புங்கசத்தன்பானுடை
மல்லைப்பவிருசிக்கின்றவர்க்கொன்றாகிமி
ளிர்வானே

வள்ளைக்களகுமுற்றுங்களிக்குஞ்சீர்பொலி
நெல்லைப்பதியினிற்செந்நிலிற்செம்பாறதில்
வையைக்கரையினிற்குன்றினத்தின்பானுவல்
பல்வாறு

மைமைக்குடிலைவெப்பங்கடக்குஞ்சீலர்க
ழல்பட்டுதிர்பொடிக்கன்பளித்தைந்தேயெனு
மையற்பிணியொழிக்குந்திருக்கண்கோடிகொள்
வல்லேரினே.(உஅ)

தய்யதன்னதாத்ததாந்த தத்ததந்ததானதன
தய்யதன்னதாத்ததாந்த தத்ததந்ததானதன
தய்யதன்னதாத்ததாந்த தத்ததந்ததானதன—தனதானா.

வல்லையன்னவாக்கம்வாய்ந்தடுத்தகொங்கைமாதர்பகர்
சொல்லையுண்மையாக்கொண்மாந்தனைக்கலந்துபாரின்மிசை
வைகுமென்னைவேற்கைவேந்தனுக்கியைந்தசாருவெனு
மவனோ

வள்ளிமின்னோர்பாற்குலாந்திருப்பிறங்கவேபலபல
புள்ளிமஞ்ஞைமேற்கொடாண்டுதித்தவன்றுதாழுமெனுண்
மல்குமின்னநீர்க்குமாண்புனைக்கையின்றிவேடமிது
வெனலாமோ

வையமெண்ணிறும்பசிதோய்ந்தரற்றவென்றுதீமைநனி
செய்யுமவன்மைநீட்டும்வேந்தனைத்தடிந்துகாருணிய
வள்ளலென்னோர்கீர்த்திதாங்கிடத்துணிந்துபாடுநசை
தரலாமோ

வர்மமன்னுதூர்த்தவீம்பனைத்தொடர்ந்துபோயவர்கள்
செய்கைநன்மையாச்சொல்பாழ்ஞ்சொல்கற்றலைந்தபாவலனை
வையும்வன்மையேற்றுமீண்டுகட்டழிந்துவாடியழ
விடலாமோ

வள்வனென்னுநாய்ப்பொலாங்குமிக்கடைந்தசாரணனை
வெல்வதெண்ணியாற்றலோங்கொருத்தனன்றுவீசுமிதழ்
வையையென்னுமாற்றினீந்திடச்செய்துங்குலாவுபுக
ழினனோ

மையின்வன்னமேய்த்தகூந்தல்பற்றியன்றிராசசபை
யுள்ளோர்பெண்ணையீர்த்துநோம்படிக்கணிந்ததோர்கலைக
வர்தலெண்ணிநூற்றின்மேம்படத்தருங்குணாலமரு
வியதாரோ

மையல்வெம்மைமாற்றுசாந்தசித்திதங்குஞானமுறு
மௌவைசொன்னபாட்டின்வாஞ்சைமுற்றியன்றுவீடுதவும்
வல்லவென்னவாழ்த்திநோர்ந்தபத்தரின்பமாரவருள்
பவனோ

வள்ளமென்னவாய்த்தபூண்டனத்துமங்கைமார்கடம
தையெனம்மைகாட்சிவேண்டிநிற்குமன்பராவலைய
வர்களெண்ணமேற்கொடீந்தளிக்குநண்புநீடுமதி
சயனோ, (௯)

வள்ளிதன்னுபூட்கைபோன்றெழுச்சிகொண்டிடாதமுலை
கள்கொள்கன்னிவேட்குஞான்றுகட்கிசைந்தகேள்வனென
வல்லைநண்ணியேற்குநோன்பினர்க்கிடுங்கைதோய்மகநல்
கிடலாரோ

வைதிகம்விடார்க்குஞாங்கர்வைத்ததிண்கையாலளவில்
வெய்யர்தம்மைமாய்த்தபாங்கினர்க்குமென்றுமோவரிய
வள்செய்தன்னைபோற்பன்மாண்பளித்துநின்றுகாவல்புரி
கிறதாரோ

வைபவம்வராக்குழாங்கள்பத்தரென்றுகூறிடினு
மையமின்மையாக்கைசேர்ந்தடித்தொழும்பதேசெய்பவர்
வல்லியன்னபாழ்த்ததீங்கனைத்தும்விண்டுபோகநினை
குதலாரோ

மல்லைதன்னிலேற்றவூண்புசித்துவந்துதாரகம
துள்ளிமுன்னைநாட்கொடாண்டுவிட்டவங்கமானதுநு
வல்கைமன்னுமூர்த்தராஞ்சிலர்க்குளென்றுநாடகமி
டுவதாரோ

மல்லன்மண்முஞுச்சொல்பாஞ்சவித்துறழ்ந்தபூதவகை
செய்துநன்மைநாட்டியாண்டசித்தனென்றுநாடியருள்
வல்லபம்விள்வார்க்குவேண்டுபெற்பல்பண்டமீயுமெணில்
கரஞுரோ

வைரமன்னஞுட்டின்மான்களொத்தியங்குபாவையர்கள்
குய்யமுன்னியாட்டைவேமபுலைத்தனங்களோடிசைவின்
மைதுனம்விராய்க்கொடுங்குவக்கும்வம்பர்நூலும்விழை
குநஞுரோ

வைகன்முன்னர்தூக்கநீங்கியச்சமின்றிநீர்முழுகி
வெய்யவன்முனீர்க்கையேந்துபெற்றிவிண்டவேதமுடன்
மல்லர்தன்மைதீர்ப்பதாம்பல்பற்பல்விஞ்சைநூலுநவின்
முதலாரோ

வள்ளுரம்வெஃகேக்கமார்ந்ததுட்டர்தங்களாள்ளைநயிடை
யையர்முன்னலோர்க்கெலாந்திடுக்கமிஞ்சுபாவமெனு
மைமையுன்னல்காட்டிநாண்கொள்பெட்புமின்றியேநிறையு
மிறையாரோ, (வ)

கல்லைமண்ணைநோக்கியான்றபத்திகொண்டுபேணுநரு
முய்யும்வண்ணமாட்கொடாங்கவிர்ச்சிதந்துளேபருகு
கள்ளமின்மெய்மோட்சவேந்துனைத்தவிர்ந்துவேறொருவ
னுளனேயோ

கல்விபொன்னிலூக்கமோங்கிழுத்தியின்பமானதனை
யெள்ளுபுன்மையோர்க்கடாங்கவிழ்த்ததந்திமீதுபொரு
கர்வமன்னுமாக்குலாந்தரத்தில்வென்றபேறுதவ
விசையாயோ

கைதைமன்னுபூக்கொடுண்பொரத்திரண்டதோண்மதன
னெய்யமம்மர்கோத்துளேங்கிமுத்தணிந்தமாதர்முலை
கள்ளநண்ணுநீக்குணுந்தகர்த்தொடர்ந்துவாழுமகிழ்
வருளாயோ

கைகைசொன்னவார்த்தைநீங்கெனத்தெரிந்துமாசுதவிர்
வில்கொண்மன்னர்போற்றுந்தோன்றலைசசெறிந்தகானில்விடு
கைமைதுன்னிறுற்குநேர்ந்திறக்கவுஞ்செய்பாசவிருள்
களையாயோ

கல்லல்வெம்மைமூர்க்கர்கூண்டெதிர்த்துவந்துபேசொலியு
மையலென்னுநீத்தமாழ்ந்தவற்பர்வம்புநான்முனைகொள்
கள்ளியன்னமாக்கள்பாயகிரக்கவுஞ்செய்பாழ்மிடியு
மொருவாயோ

கையவெண்மைமாக்கொள்வான்றலத்தைநம்பிவேள்விபல
செய்துதின்னெனுப்பலூன்றினத்துணிந்தபேருமது
கர்மமென்னலூறமசொலோர்ந்துயிர்க்கிரங்குமாறுசெய
லுதவாயோ

கள்ளையுண்ணலாற்படாந்தவிர்த்துருண்டநீசர்பொரு
ணல்கினும்வெறுப்பொய்வாஞ்சையிற்புணர்ந்துபோகவிடு
கல்விமின்னனாக்குமேங்குமற்பருஞ்சதாவிகழல்
கழியாதோ

கௌவையெண்ணிலாற்றினேர்ந்திடத்தயங்குமானிடர்க
ணல்லவிண்ணின்வாழ்க்கையாஞ்சுரககணங்களோடுமகிழ்
கைசெய்மின்னல்போற்குலாம்படைத்திறங்கொள்வீரர்புகழ்
நிலவாதோ,(வறு)

கைரவம்வெள்சீர்க்கைகாண்டகச்சிறந்தபாரியொடு
வெள்ளைவன்னமாட்டிலூர்ந்தெனக்குள்வந்துபேசியது
கைலைமன்னலாற்பினுங்கொருத்தருங்குலாவும்வலி
யுடையாரோ

கைதவன்முறுற்றலாங்கிழிப்பணங்கொய்தோர்பனவன்
மெய்மைகன்னிநாட்டுமொந்தர்முற்றறிந்துபேசவருள்
கள்வனென்னுமாற்கைதாங்கெழுத்தமைந்தவோலைமுறி
பெறல்வீணே

கௌவியம்விடார்க்கொராம்பலொத்துமுன்செய்பூசைகொடு
வௌவுகன்மமேற்றமாஞ்செயற்செயுங்கணேசனொரு
கல்லெனுண்மைவார்த்தையாங்குரைத்துமஞ்சியேமுறுதன்
முறைதானே

கையர்துன்னுபாக்கியாந்தக்குணங்கொள்வார்களது
செய்யவண்ணம்வேட்டசேநகன்வெற்பினங்கடோறுளகு
கைகடம்மிலேத்துஞான்றுரைத்திடுமபல்வாறுமவ
மெனலாமோ

கர்கரென்னராத்தினேய்ந்தசெப்பிரும்பைமூலிகையில்
வெள்ளிபொன்னதாக்கவேன்றெருப்புடங்குவாலுலைகள்
கல்வமம்மிநீர்ச்சுணும்புமுற்சொல்பண்டநேடுநரு
மிகழாதே

கள்ளியுண்ணவூட்டுபொழ்ந்தனத்தமைந்தவாலநுகர்
மையையன்னமூர்த்திபோன்றெதிர்த்தவண்டர்வேர்கடிது
கல்லுதன்மைவாய்க்கவேண்டிநித்தமுஞ்செய்மாதவம
துலையாதே

கௌரிகிண்ணமூற்றுமீர்ங்கடத்தனஞ்செய்பால்கொடுபல்
சைநர்தம்மைமாய்த்தவேந்தனுக்குமண்டர்தாமும்வெருள்
கௌசிகன்னனார்க்குமாம்புகழ்ச்சிகொண்டுவீடுமரு
விடுமாறே

கைதவம்வழார்க்குமிண்டெறித்துவந்துபோமிரவி
மையமெண்ணுநாட்டமோர்ந்தெனக்குமுன்குலாவியிருள்
கௌவுபுன்மைமாற்றியாண்டுசுத்தவிஞ்சைமூலமதை
மொழிவாயே, (௨)

அல்லைமுன்னென்மாற்றமார்ந்திருக்குமந்தநூல்களுணர்
பொய்யுமவண்ணமார்த்தநீஞ்சொலுறநிலங்குபாடலெதி
ரஃகுகிண்ணவார்த்தைவேமபெனச்சொல்வண்டர்தாமுமறி
வரியானே

ஐயமின்மகோத்தியாஞ்சமுத்திரங்கள்கோடியொடு
மைனமன்னநாற்றமாய்ந்துமிக்ககந்தமேயகொடி
யவ்வண்விண்ணுளார்க்குமேம்படத்தருங்குமாரனுனை
புனைதேவே

யல்குகன்மநூற்குமாண்புரைத்திருந்தமேதோர்பனவ
னெய்துதிண்ணமாற்றியாண்டவற்புணர்ந்தமாதையும்வெ
லையனன்னபேர்க்கெலாஞ்சடக்குறும்புமாறுநிலை
தருகோவே

யௌவைபின்வலார்க்கெலாங்கடைப்பிறந்தநாவலவன்
வெள்ளமன்னநூற்குழாந்தலைக்கணிந்தபூணனமு
னவ்வின்வண்மைகாட்டிமாண்குறட்பகர்ந்தநாளொரொலி
யிடுவானே
மையமென்னவோட்டையேந்துமுத்தர்தங்கள்வேடமொடு
கையினன்னநீட்டுமான்கள்சித்தமுங்கொளாமகிழு
மைமுகன்விராட்டுவேந்தெனத்துணிந்துநாடுமடி
யவர்பாகா
வல்லமண்ணின்மேற்செய்வேந்தருக்குமம்புமாரிபெய்மு
றைமைபன்னுமாட்சிதோய்ந்துவப்புறுந்துரோணன்மனை
யல்குல்கண்ணுறுநீசசிராங்ககற்கியென்றூர்சேயுதவ
முனியானு
யௌவியம்விராய்ப்பொயாந்தவத்தினின்றதானவரு
முள்ளமன்னுமூக்கமார்ந்திடச்செயுஞ்சதாசிவந
மைதிகமவிழாக்கொள்சாமபசித்தர்தமபிரானெனினுண்
மகிழ்வோனே
யுள்ளன்முன்மைநீர்க்குண்மாய்ந்தவற்றடிந்தமாயனொரு
கிள்ளையன்னளாய்க்கையேந்துசட்டுவங்கொணுளிலட
லையனென்னுமூர்த்திதோன்றிடப்புணர்ந்ததோள்வரிசை
யுடையானே, (௨௰)

ஐமையும்வில்வாய்ப்புமார்ந்தசக்கரங்கொடோர்பகலி
லெல்லவன்மைபோர்த்தியாங்கிருட்டவுஞ்செய்தேயமர
னைமகன்மெய்தீக்கண்வீழ்ந்திறக்கையின்றிவாழல்செயு
நெடுமாலே
யல்கொளெண்ணிலூர்க்கணுன்றொடுத்தணிந்தபாடல்கொடு
வில்லியொன்னலாரக்கொல்வான்களத்திவர்ந்ததேர்கடவி
யல்புதுன்னுசாட்டைதாங்கிநிற்குமங்கொராசைமொழி
பகர்வோனே
மையர்விண்ணின்மேற்செல்பூம்புளிக்கணென்றும்வாழுமொரு
மெய்யனென்னைவேட்டொர்ஞான்றெனக்குள்வந்துநீறதனை
யள்ளிநன்மைசாற்றிபீந்ததற்கியைந்தவாறுசெய
லறிவோனே
யல்லிமன்னுபூக்கண்வாழ்ந்தபுத்திரன்றனுன்மறைகள்
சொல்லுமுண்மைமார்க்கமாஞ்சடத்துமொன்றுமேலவனை
யையையென்னுமேச்சின்மூண்டதுட்டர்தங்குருரமற
முனிவோனே

யள்ளுவெண்மைபூத்துநீண்டறுத்ததிங்கள்போலுமெழின்
மல்குதன்னகோட்டையாங்கொடித்தெறிந்துதானவர
யர்தன்மன்னரூப்பனுங்கயற்றடிந்தவானைமுக
முதல்வோனே

யல்லமென்னல்சாப்பிடேம்புளிக்குமென்றெனுவலிது
விள்ளலன்னவார்த்தைதாங்தொடுத்தியம்புவாருமெழி
லல்லியம்வைகேற்றமார்ந்தசித்தனும்பராவவருள்
கணநாதா

வள்ளைதுன்னுமாட்டிலேன்றபித்தன்மண்செய்தேர்முறிய
மெல்லவுன்னுகீர்த்திபூண்டதைத்தெரிந்துகூறிமிக
வவ்வியுண்ணவேற்றதீஞ்சுவைப்பல்பண்டமீகுநரை
விழைவோனே

யள்ளுமுன்னர்காற்றையீன்றிடச்சகங்களானவித
நள்ளுதன்மையோர்க்குளூன்றிடத்தகுந்தபாதயுக
வைவணம்வெள்கேற்றமாஞ்சிவப்பசந்திதோறுமினி
தமர்வானே, (௩)

எல்லையின்மைகாட்டியான்சிறப்பனென்றமூடமதி
கெல்லியொண்மையாக்கியாண்டலைப்புளொன்றுகேதனமு
மெஃகமும்விண்வாய்ச்செல்வேண்டணிப்புளும்பராவவிடு
குருநாதா

வில்லையென்னுமாற்றமீண்டுரைக்கவொஞ்சுசீர்கொண்முதல்
வள்ளலன்னமாட்சிதோய்ந்திடப்பெறுங்கௌமாரர்களை
யெள்ளல்சொன்னவாய்க்குழாம்புழுச்சொரிந்துநாறல்செயு
முருகோனே

யில்லின்மன்னினுர்க்கும்வான்பதத்தையும்பெருமலிகழ்
துய்யதன்மையோர்க்கும்வேண்டன்முற்றிடுங்குகாவமர
ரெய்துமின்னன்மாற்றியாண்டவெற்பினங்கணோர்பனிரு
புயவேளே

யெய்யையன்னதூர்த்தர்தாங்தொடுத்திடுஞ்சில்பாடலையும்
வையநண்ணியேத்தவேய்ந்திடத்துணிந்தவாபறவை
யெய்யும்வின்மகார்க்குமான்கொடுத்தபெண்பொனூர்மகளோ
டணைமார்பா

வெவ்வமன்னுமேக்கமார்ந்திறைச்சியென்புதோலுதிர
வெள்ளமுண்ணுநாக்கொள்வான்றுதித்திரந்ததாலொர்குகு
வெல்லிவன்மைதீர்த்துவான்சசிக்கிணங்கவோர்குழையை
யெறிவானே

யிய்யையன்னகாட்சிதோன்றிடக்குனிந்துதானைபொதி
செவ்விமின்னனார்க்குமேன்றவர்ப்புணர்ந்துபோகமத
யில்கைகொண்மினார்க்குமாமபொதுக்குணங்கொளாடல்பயில்
பெரியானே

யில்லிகன்முனாய்த்தன்வாஞ்சைசற்றுமின்றியேகிடினு
மையலெண்ணமேற்கொள்பாங்கினிற்படும்பொலாவினையை
யில்லும்வண்மைகாட்டுகூர்ங்கடைக்கணொன்றுமூவகைய
வடிவானா

யிவ்விவென்னநோக்குமியாண்டுடைப்பல்பண்டமாயும்வள
னாயைகன்னிமூர்த்திவான்கறுப்பிவெண்பொன்மேனியின
ளில்லனண்ணுமியாக்கைபோன்றுருக்கொளுஞ்சுபாவியெனில்
வெகுளானே, ௯௫

எல்லைநண்ணுசிர்க்குழாங்களிப்படைந்துலாவவெதி
ரல்லைநண்ணுதீக்குழாநதவிப்படைந்துபோய்மறைய
வெவ்வெவன்னமாச்சொல்பூந்துணர்க்குலமபல்கோடிநக
வருசோதி

யெஃகமின்னுசீர்க்கைநீண்டவச்சுதன்றனாதுகலை
வைகுகண்ணன்வேட்டஞான்றிரக்கமின்றியாடரவ
மெஃகிமன்னுதேர்க்கொள்வான்குறிப்புமங்குமாறுசிறி
திருள்வோனே

யெல்லொர்னென்னுண்மூக்கைநேர்ந்துமற்றபுங்கவாபெரிது
தெய்வமெண்ணுநாட்டமார்ந்திடச்செயுங்குனாலமக
வெள்ளின்வண்ணமாசசெய்நீந்துவக்குமங்கர்கோனையுநல்
கிசையோனே

யெல்லைதன்னையாக்கிவான்றனக்கியைந்தநீபமென
வொள்விடும்வியாத்தியாண்டைகைத்திறங்கொள்வாய்வெளிறு
மெல்லவன்மெய்தேய்த்துமாந்திவிட்டிடுஞ்செயோயெனது
ளுறவோனே

யெவ்வனம்வராப்பெண்மாந்தளிர்ச்சுகந்தமேனியிள
முல்லையன்னதூப்பல்சார்ந்தெறித்ததொண்டையாசைகொடு
மெவ்வரும்விள்கீர்த்திசாய்ந்திடத்தயங்குவேனும்விழை
தருபேறே

யில்லிதுன்னினீர்க்கொள்பாண்டமொத்தநெஞ்சர்தேறரிய
தொல்லைவண்மைவாய்த்தவோங்கலிற்சிறந்தவேகபர
வில்லமண்ணல்கோத்தெள்கார்ந்திடச்செய்கின்றவாறருள்செய்
தகையோனே

யெவ்வவெண்ணுவார்க்குமாங்கிசைக்குமந்தராதிபமெய்
பொய்சொன்முன்னை நூற்கெலாந்துணைச்செயும்பாரபரவெ
யில்செய்தண்ணிலாக்கண்வார்ந்திறப்பில்வென்றியீயுமமு
துருவானு

யெஃகொடண்ணும்வாட்கொடீர்ந்திடற்கிசைந்திடாவடிவ
வல்லமன்முனுக்குலாங்குருத்துவங்கொள்வோர்களறி
வில்வைகண்ணலாய்ச்சுகாந்தரத்தமைந்துமியாவும்வல
கிழவோனே,(௨௯)

தனனதனதானதந்ததந்த தனனதனதானதந்ததந்த
தனனதனதானதந்ததந்த—தனனதனதானனு.

கிழவர்பொருளீயினுங்கனிந்த
மனமுடைமைபோலவஞ்சகஞ்செய்
கிளிமொழிமினுரையும்புணர்ந்து பிணிகள்பலதேடுவார்

கிரிசைமணவாளனன்றொர்தொண்டன்
மகவரியவாடும்வம்பிகழ்ந்து
கிளர்கருணைமேயசிந்தைவிஞ்சை முனிவரையுமேசுவோர்

கிடுபிடிமலாரிபம்பைகொம்பு
முரசுதவில்பேரியுங்கறங்கு
கெருவமுறுசேனைவென்றிநம்பு மரசரையவாவுவோர்

கெருடன்வரைகேதனங்கொள்கொண்ட
லெனவுமதுமாமிசங்களுண்டு
கெடுமதிகபாதகம்பொருந்து நரையுநுவல்பாவலோர்

கெதியடையுமாறுகண்டுகொண்டு
முயலுமுனிவோரினுஞ்சினஞ்செய்
கெசதுரகவாகனங்கொண்மொய்ம்ப ருயர்வெனவுனுவோர்

கெலிதருபல்பாடல்கொண்டெழுந்து
சரபமெனவேமுழங்குதெம்பர்
கிளவிநயமாதினன்குணர்ந்து மவருரிமைமேவிடார்

கிறிபடுபல்வாசகம்பகர்ந்து
முறைதவறிமானிடம்புகுந்த
கிளையினரெலாம்வருந்திவெம்பி யழுதல்புரிபான்மையோர்

கிடைகொள்சிறுபாயணிந்தியங்கு
மயிலிறகின்மேன்மைகுன்றவுஞ்செய்
கிறசமணர்நூல்வியந்துகும்பன் முதலினர்தொனூல்கொளார்,

கிருதகுளபாயசங்களுண்டு
முதிரவிணமுனெனும்பருந்து
கிலமதிகெடாதுறுங்குணுங்க ொடுபழகுதாழ்மையோர்

கிருபுணர்சகாயமொன்றுநம்பி
யுடனுடன்விடாதலைந்தலைந்து
கிசுகிசெனராசியங்கள்விண்டு மிகமறுகுசீர்மையோர்

கிருமைபமயமாவிளங்குமுன்றன்
மகிமையறியாதுளந்தளர்ந்து
கிரகபலமேசிறந்ததென்று துணியுநிலைமாறிடார்

கிறுகிறெனவேசிரஞ்சுழன்ற
லகிரிதருநீயபண்டமுண்டு
கிடுகிடெனவூரின்மைந்தரஞ்ச வுலவமனநாணுறார்

கிருடியொடுவாணிபந்தொடர்ந்து
பொருள்பெரிதுதேடியொண்சதங்கை
கிலுகிலெனநேருமைந்தர்பெண்டு முதலினர்கள்சீர்செய்வோர்

கெழுவுகுடைநீழலொன்றுகொண்ட
வரசர்பலர்மாய்ந்தல்கண்டுமெங்கள்
கிளையமிதெனுவிளம்பிமிண்டு மடமைசெறிவாகினோர்

கிணுகிணெனவேமுணங்கலன்றி
யுருவுணர்தியானமின்றிநின்று
கிசிலுறுபுளாவருந்துபண்பர் முதலியபொலார்பலோர்

கிளுவைசெறிகானிடந்திரிந்த
மிருகமனையார்களென்றறிந்து
கிரணமலிபானுநிங்கண்முன்பு தொழுதெழுதலீனமோ,வ

பழமறைபலாயிரம்பகர்ந்த
பெருமைபெறுநாடகம்புரிந்த
பரமசிவமேயெனுஞ்சொல்விண்டு கருதுவதுமூடமோ

பவளநிகர்வாய்திறந்தடர்ந்த
வுலகினமெலாமயின்றுமிழ்ந்த
பசியமுகில்பாதபங்கயங்க ணினைவதுபொயாகுமோ

படர்சடைநிலாவுகுன்றமென்று
ரரிமிசையுலாவுதுங்கநங்கை
பகர்மொழிபொயாகுமென்றுளஞ்சு மயர்வும்வரலாகுமோ

பலபயறுதோசைசெங்கரும்பு
வடைசுகியன்மோதகங்களுண்ட
பகடொருகணாவில்வந்துதந்த வரமுமழிவாகுமோ
பரணிலுறுகோகிலஞ்சினந்த
பொழுதடிபராவியும்புணர்ந்த
பரிசுறுவிசாகனன்றுசொந்த வடிமையெனன்மோசமோ
பசுநிணமெநாளுமுண்டகுண்டர்
குடிகெடுதலைவிழைந்துதொண்டர்
பதமலரிலையணைந்துதிர்ந்த பொடியணிதலோர்தியோ
பனிமலர்களாயவம்பொரைந்து
கொளுமதனனான்முகன்சமன்செய்
பகையொழியநாடுகின்றநெஞ்சுமெளிதெனவிள்வாய்கொலோ
படிககனபாதலங்கள்கொண்ட
நரரமரர்நாகர்கண்டியம்பு
பவிசுதவினாலுன்வென்றிகுன்றி யறமுநிலைபெருமோ, ()

பறிதலையுளார்கணஞ்செறிந்த
கழுநிரையிலேறவென்றுநின்ற
பதிகநெடுமாரிமுன்சொரிந்து சிவிகையிவர்பாலனோ
பகவசநிதானமுஞ்சிறந்த
வடியவர்மடாலயங்களுஞ்சு
பலமுறவனேகர்பொன்கவர்ந்து கொலைசெய்பரகாலனோ
பரவையினதாழமும்பொலிந்த
ககனமதனீளமுந்தெரிந்து
பழுதறுவிநாயகன்பதங்க ளணியுமொருபூதமோ
பளபளபளீரென்மின்புரைந்த
கதிரயில்விடாதசெங்கரன்சொல்
பதியுமிதயாரவிந்தகும்ப னனையகவுமாரனோ
பரமதமெலாமுனிந்துவென்று
தமதுமதமாறுமுன்புரந்து
பளாபதசரோருகம்புகுந்த சமரசகுணாலனோ
பவனனதுமாதவந்திரண்டு
ரகுபதிசகாயனென்றவிர்ந்து
பரிதிபகர்நூனலந்தெரிந்த பெருமைகொளும்வீரனோ

பயிலுமிவரியாவரும்புகுந்த
வொருவடிவனேயெனுஞ்சொல்கொண்டு
பவவுததியேழையுங்கடந்து னிடைவதியுமாதினே
பதுமன்முதலோருநன்கிறைஞ்சு
பிரணவசொரூபமொன்றிவந்து
பகலனையஞானவிஞ்சைதந்தெ னினைவில்விளையாடுவாய்,

தழலவனுநாணவெம்பிடும்பல்
கிரணமுடனூழியொன்றிசைந்த
சகடமிசையேறிவிண்பிறங்க நிதமும்வருசோதியே
தமனியமின்வேதமங்கையெண்கண்
விதிமுதலினோரிருந்தலர்ந்த
சலசமுதலாநெருஞ்சியென்ற புதல்வரைகொள்பீடுளாய்
சமுசயமும்வீரமுங்கெடும்பு
மிகழ்தருபொருமையுஞ்சுமந்து
தழைமதசமூகமுந்துணிந்து பரவநிகழ்பானுவே
தமியனெநாள்வணங்கிநின்றென்
மனவிழைவெலாமொழிந்துநொந்து
தளர்வதறியாரில்வந்துசென்று வருபொருவில்சூரியா
சடைமுடியின்மீதிருந்ததிங்கள்
வழிதலெனநீறணிந்திசைந்த
தவளவிடையேறிவந்துதொண்டர் கருதும்வரமீகுவாய்
தரணிமதிதீயெனுங்கணொன்றும்
வதனமலராறுடங்கிருந்து
தனையனையரூபமொன்றுகந்தன் வரவருண்மயேசுரா
சகளசிவயோகமுஞ்சிறந்த
வகளபரஞானமும்புனைந்த
சரணமலரோரிரண்டுகொண்டு வெளிவளர்சதாசிவா
சடபரதனேயெனுந்திறங்கொள்
கருணையுடையானைவம்பமொன்ற
தடிமுரடர்வேர்களைந்தவிர்ந்த மழுவணிபுயாசலா,(௨௬)

தமிழ்கொடுபராவுமந்தணன்றன்
மொழிதவறிடாமலன்றுவந்து
தகதகதகாயமென்றிலங்கொர் குழையெறியுமாயியே

தடவரையெலாம்வணங்கநின்ற
விமயமலைமாதவம்பொலிந்து
தனையளுருவாயும்வந்துயர்ந்த பசியகவுமாரியே

சரதமொருகாணியுந்தவிர்ந்து
புவிமுழுதும்வாடும்வம்புகொண்டு
தகுவர்நிகாவார்நிணம்பொதிந்து மொழுகுதிரிசூலியே

சகலருணராநலந்தெரிந்த
பெரியவர்கள்சீரிகழ்ந்தெரிந்த
தமருணர்செநீர்நிறைந்தலம்பு கரதலகபாலியே

தளவநகைமாதர்கொங்கையின்ப
முடனுறிகடோறுறுஞ்செறிந்த
தயிர்கவர்தல்கூறினுங்குளிர்ந்து கருணைசெயுமாதவா

தடநடுவிலேகிடந்திரைந்த
பணிமுதுகிலேறியன்றுநின்று
தமரவரொலாமறிந்திறைஞ்ச வொருநடனமாடினாய்

தசவடிவுளானெனுஞ்சொல்விண்டு
பலர்பரவஞாயநன்குணர்ந்த
தவரறிபலாயிரஞ்சடங்கொள் பெருமையுறுகேசவா

தரையினெடுவானளந்தவென்றி
நனிகருதுவாருடன்கலந்து
தருமமுயல்வாரினம்புகுந்த பரமபதநாயகா, (௭)

அழகியமதாணிமுன்சொலும்பல்
பணிகளுமராவினங்களுங்கொ
டணிதருவிநோதமொன்றநின்ற பவளமலைபோலுளா

யகிலமடமாதரும்பணிந்து
பரவுமவையாரையன்றுவெண்பொ
னசலமிசையேறவுஞ்செயுங்கை யுடையகணநாதனே

யலகறும்விகாதமுங்களைந்து
நலமுழுதுமீதியென்றிறைஞ்சி
யறுகுசொரிவாருடன்கலந்து நிகழுறுசொரூபனே

யரியகலியாணமொன்றுபந்த
ரினுமகளிர்நூலிழந்துவெம்பு
மவணினுமுருவிளங்குதந்தி வதனமுறுமாதியே

யசுரர்குலவேர்களைந்துசெம்பொ
னகரிலுறுவார்விலங்கும்விண்ட
வயிலணிகுகாசிகண்டியொன்றி லுலகைவலமாகிநு
யபரிதநூல்களுந்தெரிந்த
புலவனெனநாமமொன்றுகொண்டெ
னளவினுமகாதவஞ்சகஞ்செய் குமரகுருதேசிகா
வடிமைகொளெனுமொழிந்துநொந்த
வெனதுகனவூடுவெகுதுபண்டை
யருணகிரிநாதனென்றியம்ப வொருசிபிதுநாணிலா
யறல்கருதியோர்பெருங்கருங்க
லிடைகிணறிநாள்செய்கின்றபண்பி
னதிசயம்வினவியுந்தயங்க விடுகபடவேடுவா,(௨௯)

அருமறையொடாகமங்களுஞ்சொ
லிடவுலகமியாவையும்பொதிந்த
வறுசமயபேதமுங்கடந்த பொதுநிலையின்மேவிநு
யமணர்முதலோர்களுந்துணிந்து
தமதுபொருளாகுமென்பதன்றி
யழிதசையெலாமருந்துகின்ற பிடகருமவாவுவா
யுயிர்சமயகோடியன்றியிந்த
வுலகினினிமேலொர்வஞ்சநெஞ்ச
னறையுமதசாரமும்பொருந்தி யதினுமுறுமேகனே
யருவிபலவோலிடுங்குறிஞ்சி
முதலியனவாநிலங்களைந்தி
னதிவிதவிழாவினுங்கலந்து மகிழ்வுறுகுணாலயா
யவனவளதாகியன்றிநின்ற
நிலையுணருமோனவிஞ்சைமைந்த
ரறிவினறிவாகியங்குமின்றி யகலுறுமதீதமே
யசரசரகோடிகொண்டிருண்ட
பிரகிருதிமூலமொன்றையன்றி
யணுவுமசையாதெனுந்தொழும்பர் தமையகலுமாறிலா
யதனெதிரதாய்விளங்குகின்ற
பெருமையுமுளாய்சுகந்தகந்த
மனையபரமேயகண்டகண்ட மௌனநிகழ்சுபாவமே
யபிநயமிலாமைகண்டுவந்த
கனவினிணையேபிறந்திறந்த
வவதிமுடிவேதொடர்ந்தருந்து திருவருள்விலாசமே.௩௰

ஒலியலந்தாதிமுற்றிற்று.

நூன்மாட்சி.

தனனதனதந்ததந்ததந்தன தனனதனதந்ததந்ததந்தன
தனனதனதந்ததந்ததந்தன — தனதனந்தானனா.

கமலமலரோன்றுமந்தணன்றரு
புதல்வர்களின்முந்திவந்தவண்பெறு
கலசமுனிவன்பகர்ந்திடும்பல பனுவலின்றுய்கிடர்
கடல்வளையுமிந்தமண்டலந்தனில்
வருபுலவர்கண்டுகண்டுளொஞ்சவொர்
கடியசபதம்பொரும்பெருந்தகை யுடனுறுஞ்சீரதே
யெமனடுநடுங்கவென்றவன்றிரு
வருணையினுமண்பெணென்றுறும்பதி
யினும்வருமிரண்டுதொண்டருந்தெரி பெருநலந்தோய்வதே
யிகபரமிரண்டையுங்களைந்துறு
கதியினர்பதங்கமழ்ந்தநுண்டுக
ளினுமுயர்வதுண்டென்வம்பர்சிந்தைசெய் நினைவிலண்டாததே
குமரனரனைங்கரன்பதங்களை
வகையடைகொண்டகொண்டலம்பிகை
குலவுசண்மதங்களுங்கடந்தது மொருமையென்றோதுமே
குறைவுபடுபுன்குணம்பொருந்திய
கவிஞரிடிகண்டுநைந்தவங்கத
குலமெனவசந்தவிர்ந்திடும்படி மிகமுழங்கிடதே
சமரசபதந்தரும்பெருந்துணை
யமரருணவுங்கசந்திடுஞ்சுவை
சரசுவதிமங்கலந்தெரிந்துள சரதசிங்காரநூல்
சலனமிலருந்தவம்புரிந்தவர்
தொழுமலயமென்றகுன்றமுன்றரு
தமிழ்மகுடமென்றிலங்குகின்றதி வொளியலந்தாதியே.

மெய்யடியார்திருவடிகளேசரணம்.

தெய்வமேதுணை.